# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

2064 ஆம் இலக்கம் - 2018 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 23 ஆந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி I : தொகுதி (IIஅ) - விளம்பரங்கள்

## பதவிகள் - வெற்றிடம்

**இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியில் விளம்பரப்படுத்தப்படும் அரச சேவை நியமனங்களுக்கு ஏற்புடைத்தாகும் பொது நிபந்தனைகளுக்கும் பரீட்சார்த்திகள் கவனிக்க வேண்டிய விதிகளுக்கும் அறிவுறுத்தல்களுக்கும் மேற்படி வர்த்தமானியைப் பார்க்கவும்**

### மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு

மதிப்பீட்டு முகாமைத்துவ உதவியாளர் தொழில்நுட்ப சேவைப் பிரிவில் தொழில்நுட்ப உத்தியோகத்தர் பதவிக்காக திறந்த முறையில் இணைத்துக் கொள்ளல்

மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் மதிப்பீட்டு முகாமைத்துவ உதவியாளர் தொழில்நுட்ப சேவைப் பிரிவில் தொழில்நுட்ப உத்தியோகத்தர் பதவியில் காணப்படுகின்ற ஒரு வெற்றிடத்தினை நிரப்புவதற்காக இவ்வறிவித்தலில் குறிப்பிடப்பட்ட தகுதியுடைய இலங்கைப் பிரசைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

01. **இணைத்துக் கொள்ளும் முறை:**

அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள பூரண தகைமைகளைக் கொண்ட விண்ணப்பதாரர்கள் மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் செயலாளர் அவர்களினால் அனுமதிக்கப்படுகின்ற நிறுவனம் ஒன்றின் மூலமாக நடாத்தப்படுகின்ற எழுத்துப் போட்டிப் பரீட்சையில் பெறப்படுகின்ற மொத்தப் புள்ளிகளின் தொடர் அடிப்படையில் சாதாரண நேர்முகப் பரீட்சைக்கு உட்படுத்தப்படுவர்.

எழுத்துமூலப் பரீட்சைக்கு பின்வருமாறு புள்ளிகள் வழங்கப்படும்:

| விடயங்கள் | உச்சப் புள்ளிகளின் அளவு | சித்தி எய்தும் புள்ளிகள் |
|---|---|---|
| நுண்ணறிவுப் பரீட்சை | 100 | 40% |
| விடயத்துடன் தொடர்புடைய தொழில்நுட்ப பரீட்சை | 100 | 40% |

02. **கடமைகள்:**
குறிப்பிட்டதென வேலைகள் வழங்கப்படாததுடன் இந்தச் சேவை அலகுக்கு வழங்கப்படுகின்ற எந்தவொரு வேலையினையும் சேவையின் அவசியம், முன்னுரிமை மற்றும் திறன்கள் அடிப்படையில் மேற்கொள்ளப்பட வேண்டும். பிரதானமாக அமைச்சின் பரிபாலனப் பிரிவின் நடவடிக்கைகளை திட்டமிடல் மற்றும் கருத்திட்டங்களை தொடர்புபடுத்தும் நடவடிக்கை களில் தொழில்நுட்ப உதவியினை வழங்குதல் என்பன எதிர்பார்க்கப்படுகின்றது.

(i) கட்டட நிர்மாணம் மற்றும் பராமரிப்பு நடவடிக்கைகளுக்கான அளவுச் சீட்டு மதிப்பீடு செய்தல் மற்றும் பில் பரிசீலனை செலுத்துதல்;
(ii) மாகாண/ கிராமிய பாதைகளின் நிர்மாணம் மற்றும் பராமரிப்பு தொடர்பாக அளவுச் சீட்டு மதிப்பீடு செய்தல் மற்றும் பில் பரிசீலனை செலுத்துதல்;
(iii) திண்மக் கழிவு முகாமைத்துவம் கொம்போஸ்ட் தொகுதிகளை நிர்மாணித்தல் மற்றும் பராமரிப்புச் செய்தல்;
(iv) மேற்பாலங்கள், மதகுகள், பக்கச் சுவர்கள் என்பவற்றினை பராமரித்தல் மற்றும் அளவீட்டு அட்டைகளைத் தயாரித்தல்;
(v) நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு நிர்மாணப் பராமரிப்புக்காக மதிப்பீட்டினைத் தயாரித்தல்;
(vi) கொள்முதல் தொழில்நுட்ப மதிப்பீட்டு அறிக்கையினைத் தயாரித்தல் ஒப்பந்த உடன்படிக்கைகள் தொடர்பான அறிவு.

03. **தேவையான தகைமைகள்:**

3.1 ***கல்வித் தகைமைகள்***
விடயத்துடன் தொடர்பான பாடங்கள் 02 உடன் விஞ்ஞானம்/ கணிதம் மற்றும் தொழில்நுட்பம் ஆகிய பாட விதானங்களுடன் தொடர்புடைய பௌதிக விஞ்ஞானம், இணைந்த கணிதம், இராசயனவியல், தொழில்நுட்பம் மற்றும் விஞ்ஞானம், தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பம், பொறியியல் தொழில்நுட்பம் ஆகிய பாடங்கள் 03 இல் க.பொ.த. உயர் தரப்பரீட்சையில் ஒரே தடவையில் சித்தி அடைந்திருத்தல் (சாதாரண ஆங்கிலம் பொதுச் சாதாரணப் பரீட்சை தவிர்த்து);

மற்றும்

க.பொ.த. (சா.த.) பரீட்சையில் சிங்கள, தமிழ், ஆங்கில மொழி/விஞ்ஞானம், கணிதம் மற்றும் ஒரு பாடத்தில் திறமைச் சித்தியுடன் ஒரே தடவையில் 06 பாடங்களில் சித்தி அடைந்து இருத்தல்.

3.2 ***தொழில் தகைமைகள்:***

(i) மொரட்டுவை பல்கலைக்கழகத்தினால் அல்லது அம்பாறை ஹாடி நிறுவனத்தினால் வழங்கப்படுகின்ற தேசிய தொழில்நுட்ப டிப்ளோமா ;

அல்லது

(ii) தேசிய பயிலுநர் மற்றும் தொழில்நுட்ப பயிற்சி வழங்கும் அதிகார சபையினால் வழங்கப்படுகின்ற பொறியியல் விஞ்ஞான தேசிய டிப்ளோமா ;

அல்லது

(iii) கல்வி மற்றும் உயர்கல்வி அமைச்சினால் வழங்கப்படுகின்ற தேசிய உயர்பொறியியல் டிப்ளோமா ;

அல்லது

(iv) இலங்கைத் திறந்த பல்கலைக்கழகத்தினால் வழங்கப்படுகின்ற தொழில்நுட்ப டிப்ளோமா;

அல்லது

(v) இலங்கைப் பொறியியல் நிறுவனத்தினால் நடாத்தப்படுகின்ற பொறியியல் பரீட்சையின் முதலாம் பகுதியை வெற்றிகரமாகப் பூரணப்படுத்தி இருத்தல்;

அல்லது

(vi) தொழில்துறைக்கு உரியவாறு தேசிய தொழில்திறன் (NVQ6) மட்டத்தில் தகைமைகளைப் பூரணப்படுத்தி இருத்தல்;

அல்லது

(vii) உயர்கல்வி அமைச்சு மற்றும் மேற்குறிப்பிடப்பட்ட தொழில்நுட்ப சான்றிதழ்களை வழங்குகின்ற நிறுவனங்களிடம் வினவி கருத்துக்களைப் பெற்றுக் கொண்டதன் பின்னர் மேற்குறிப்பிடப்பட்ட தொழில்நுட்ப தகைமைகளுக்கு சகல விதத்திலும் சமமானது என இலங்கை தொழில்நுட்ப சேவை ஆணைக்குழுவினால் ஏற்றுக்கொள்ளப்படும் ஏனைய தொழில்நுட்ப தகைமைகளைப் பெற்றிருத்தல்.

3.3. அனுபவம் ஏற்புடையதன்று.

3.4 ***உடற்தகைமை.-*** இலங்கையின் எப்பாகத்திலும் சேவை செய்வதற்கு மற்றும் கடமையை மேற்கொள்வதற்கு போதிய உடல் மற்றும் உளத் தகைமையைக் கொண்டிருக்க வேண்டும்.

3.5 ***ஏனையவை.-***
(i) இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும் ;
(ii) சிறந்த குணவியல்பு உள்ளவராக இருக்க வேண்டும் ;
(iii) ஏதாவது ஒரு மத அமைப்பின் மதகுருவானவர் இந்தப் பரீட்சைக்கு தோற்றுவதற்கு தகுதியற்றவராவர்;
(iv) விண்ணப்பதாரர்கள் தகுதி மற்றும் விண்ணப்பம் கோரப்படும் தினத்தில் குறிப்பிடப்பட்ட வயதெல்லை ஆகியவற்றினை சகல விதத்திலும் பூரணப்படுத்தி இருப்பின் மாத்திரமே சேவையில் இணைத்துக் கொள்வதற்கான போட்டிப் பரீட்சையில் தோற்றுவதற்காகத் தேவையான தகுதிகள் உடையவரென ஏற்றுக் கொள்ளப்படும்.

04. **வயதெல்லை:**

விண்ணப்பதாரிகள் விண்ணப்பிக்கும் இறுதி நாளில் 18 வயதிற்குக் குறையாமலும் 30 வயதிற்குக் கூடாமலும் இருக்க வேண்டும்.

05. **சம்பள அளவுத்திட்டம்:**

இந்தப் பதவிக்கு ரூபா 31,040- 10 × 445 - 11 × 660 - 10 × 730 - 10 × 750 - ரூபா 57,550 மாதாந்த சம்பள அளவுத் திட்டம் உரித்துடையது. இந்த சம்பள அளவுத்திட்டத்திற்கு உரிய கொடுப்பனவு மேற்கொள்ளப்படுவது, 2020.01.01 ஆந் திகதி என்பதுடன் அன்றைய தினம் வரை கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்படுவது அ.நி.சு. 03/2016 இன் 11 ஆம் அட்டவணையின் படியாகும். (2018 ஆம் ஆண்டுக்கான மாதாந்த சம்பளம் ரூ. 24,626 என்பதுடன், சரி செய்யப்பட்ட கொடுப்பனவு ரூபா 3,380 ஆகும்.

06. **சேவையில் அமர்த்துவதற்கான நிபந்தனைகள் மற்றும் சேவை நிபந்தனைகள்:**

6.1 இப்பதவி நிரந்தரமானது. ஓய்வூதியம் உரித்துடையது. உங்களுக்கு கிடைக்கக்கூடிய ஓய்வூதியத் திட்டம் தொடர்பாக அரசாங்கத்தினால் எதிர்காலத்தில் எடுக்கப்படும் கொள்கை ரீதியான தீர்மானத்திற்கு தாங்கள் கட்டுப்படுதல் வேண்டும். மேலும் தாங்கள் விதவைகள்/அநாதைகள் ஓய்வூதியத்திட்டத்திற்கு பங்களிப்புச்

**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

**முக்கிய அறிவித்தல்கள்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்.** இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழை திருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு **இரண்டு வாரங்களுக்கு முன்னர்**, அதாவது 2018, ஏப்பிறல் மாதம் 12 ஆந் திகதி வியாழக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2018, மாச்சு மாதம் 29 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு**

*"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."*

**கங்கானி லியனகே,**
அரசாங்க அழுத்தகர் (பதில்).

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு 8,
2018 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.

செய்தல் வேண்டும். அரசாங்கத்தினால் காலத்திற்குக் காலம் தீர்மானிக்கப்படுகின்ற விதமாக தாங்களால் அது தொடர்பாக பங்களிப்புத் தொகை செலுத்தல் வேண்டும்.

6.2 இலங்கை தொழில்நுட்ப சேவை நியதிகளுக்கு அமைய தடைதாண்டல் பரீட்சை மற்றும் அரச மொழிக் கொள்கை தொடர்பான தேர்ச்சியினைப் பெற்றுக்கொள்ளுதல் வேண்டும்.

6.3 இந்த நியமனம் அரச சேவை ஆணைக்குழுவின் செயற்கொள்கை, நிதி ஒழுங்கு விதிகள், தாபன விதிமுறைகள், இலங்கை தொழில்நுட்ப சேவை அரசியலமைப்பு கொள்கைகள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சில் கண்காணிப்பு முகாமைத்துவ தொழில்நுட்ப சேவை வகையின் தொழில்நுட்ப உத்தியோகத்தர் பதவிக்காக இணைத்துக் கொள்ளப்படும் கொள்கையில் குறிப்பிடப்பட்டுள்ள விதிமுறைகள் மற்றும் அதனுடன் தொடர்பான திருத்தங்கள் மற்றும் விதிமுறைகள் என்பவற்றுக்கு உட்பட்டது.

07. **விண்ணப்பதாரர்களின் அடையாளம்:**

7.1 சம்பூரணமாக பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பங்களைச் சமர்ப்பித்த விண்ணப்பதாரர்கள் மாத்திரமே எழுத்து மூலமான பரீட்சைக்கு அழைக்கப்படுவர்.

7.2 நேர்முகப் பரீட்சையில் அனைத்து சான்றிதழ்களின் மூலப் பிரதிகள் மற்றும் உரிய முறையில் அத்தாட்சிப்படுத்தப்பட்ட பிரதிகள் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

7.3 நேர்முகப் பரீட்சையில் தங்களது அடையாளத்தினை உறுதிப்படுத்துவதற்காக கீழே குறிப்பிடப்பட்ட ஆவணங்களின் ஏதேனும் ஒன்றினை நேர்முகப் பரீட்சைக் குழுவுக்கு சமர்ப்பிக்க வேண்டும்.

(i) ஆட்பதிவுத் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட செல்லுபடியான தேசிய ஆளடையாள அட்டை ;
(ii) செல்லுபடியான கடவுச்சீட்டு.

08. **விண்ணப்பங்களைச் சமர்ப்பித்தல்:**

8.1 விண்ணப்பங்கள் 2018.04.23 ஆந் திகதிக்கு முன்னர் கீழே குறிப்பிடப்பட்ட முகவரிக்கு கிடைக்குமாறு பதிவுத் தபாலில் அனுப்பி வைக்கப்படல் வேண்டும். அன்றைய தினத்தின் பின்னர் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

செயலாளர்,
மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு,
இல. 330, யூனியன் பிளேஸ்,
கொழும்பு 02.

8.2 சமர்ப்பிக்கப்பட வேண்டிய விண்ணப்பப்படிவத்தின் மாதிரியானது இவ்வறிவித்தலின் இறுதியில் காட்டப்பட்டுள்ளது. விண்ணப்பதாரிகள் அவர்களின் விண்ணப்பங்களை A4 அளவுடைய கடதாசியில் தயார் செய்து முதலாம் பக்கத்தில் இலக்கம் 01 இலிருந்து 03 வரையும் 02 ஆம் பக்கத்தில் இலக்கம் 4.1 - 4.3 வரையும் மூன்றாம் பக்கத்தில், 05-07 வரையும், நான்காம் பக்கத்தில் இலக்கம் 08 ஆம் பகுதியையும் என்ற விதமாக ஒழுங்குபடுத்தி தங்களது கையெழுத்தினால் பூரணப்படுத்தப்பட வேண்டும்.

8.3 விண்ணப்பம் அனுப்பப்படும் கடித உறையில் இடது பக்க மேல் மூலையில் "தொழில்நுட்ப உத்தியோகத்தர் பதவிக்கான விண்ணப்பப்படிவம்" என குறிப்பிடப்பட வேண்டும்.

8.4 விண்ணப்பதாரியின் கையொப்பமானது அரச பாடசாலை அதிபரொருவர்/சமாதான நீதவானொருவர்/ சத்தியப் பிரமாண ஆணையாளரொருவர்/ சட்டத்தரணியொருவர்/ பிரசித்த நொத்தாரிசு ஒருவர்/ முப்படைகளின் அதிகாரம் பெற்ற உத்தியோகத்தரொருவர்/ பொலிஸ் சேவையில் வர்த்தமானியில் வெளியிடப்பட்ட பதவி வகிக்கும் ஒருவர் அல்லது ரூபா 37,743 இற்கு மேலதிகமான மாதாந்த மொத்த சம்பளம் பெறும் நிரந்தர அரச பதவி வகிக்கும் உத்தியோகத்தர் ஒருவரினால் சான்றுப்படுத்தப்பட வேண்டும்.

8.5 தற்போது அரச சேவையில் அல்லது மாகாண அரச சேவையில் உள்ள உத்தியோகத்தர்கள் தமது விண்ணப்பப்படிவத்தினை தமது நிறுவனத்தில் தலைவரினூடாக சமர்ப்பித்தல் வேண்டும்.

8.6 இத்துடன் உள்ள மாதிரி விண்ணப்பப் படிவத்திற்கு இணங்காத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். விண்ணப்பங்கள் காணாமல் போதல் அல்லது தாமதமாகுதல் தொடர்பாக எவ்விதமான முறைப்பாடுகளும் பொறுப்பேற்கப்படமாட்டாது.

09. **பிழையான தகவல்களை வழங்குதல்:**

உங்களால் அனுப்பப்படும் விண்ணப்பப்படிவங்களில் குறிப்பிடப்பட்ட அனைத்திலும் ஏதாவதொரு தகவல் பொய்யானது அல்லது பிழையானது என இணைத்துக்கொள்ளப்படுவதற்கு முன்னர் தெரியவந்தால் உங்களின் விண்ணப்பம் செல்லுபடியற்றதாக்கப்படும். அவ்வாறு பொய்யான அல்லது பிழையான தகவலொன்று இணைத்துக்கொள்ளப்பட்டதன் பின்னர் தெரியவந்தால் அதற்குரிய முறைகளின்படி சேவையிலிருந்து நீக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

எச். ரீ. கமல் பத்மசிறி,
செயலாளர்,
மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு.

மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு,
கொழும்பு 02.
2018, பெப்புருவரி 22.

மாதிரி விண்ணப்பப்படிவம்

| |
|---|
| |

அலுவலக உபயோகித்திற்கு மாத்திரம்

**மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு**

தொழில்நுட்ப உத்தியோகத்தர் பதவிக்கு இணைத்துக்கொள்ளல்

விண்ணப்பிக்கும் மொழி :

சிங்களம் - 1
தமிழ் - 2
ஆங்கிலம் - 3 ☐
(பொருத்தமான இலக்கத்தை கூட்டில் இடவும்)

01.

1.1 முதலெழுத்துக்களுடன் பெயர்: (திரு./திருமதி/செல்வி) :----- .
(ஆங்கில கெப்பிட்டல் எழுத்துக்களில்)

1.2 முழுப்பெயர் :-----.
(ஆங்கில கெப்பிடல் எழுத்துக்களில்)

1.3 முழுப்பெயர் :-----.
(சிங்களத்தில்/தமிழில்)

02.

2.1 நிரந்தர முகவரி :------.

2.2 தொலைபேசி இலக்கம் :-

| | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| நிலையானது : | | | | | | | | | | | |
| கையாடக்கத் தொலைபேசி: | | | | | | | | | | | |

3. 3.1 இனம் :
(சிங்களம் - 1, தமிழ் - 2, முஸ்லிம் -4, வேறு - 5) ☐
(பொருத்தமான இலக்கத்தை கூட்டில் இடவும்)

3.2 பால் :

| | |
|---|---|
| ஆண் | |
| பெண் | |

(உரிய கூண்டினுள் (✔) அடையாளத்தை இடவும்)

3.3 விவாக நிலை:

| | | | |
|---|---|---|---|
| விவாகமானவரா? | | விவாகமாகாதவரா? | |

3.4 தேசிய ஆளடையாள அட்டை இலக்கம்: ☐☐☐☐☐☐☐☐☐☐☐☐

3.5 பிறந்த திகதி :-
ஆண்டு: ☐☐☐☐ மாதம்: ☐☐ திகதி: ☐☐

3.6 2018.04.23 ஆந் திகதிக்கு வயது :-
வருடங்கள் : ☐☐ மாதங்கள் : ☐☐ நாட்கள் : ☐☐

4. தகைமைகள் :-

4.1 க.பொ.த. (சா.த.) தொடர்பான விபரங்கள் :
I. பரீட்சை வருடம் மற்றும் மாதம் :-----.
II. பரீட்சை இலக்கம் :-----.
III. முடிவுகள் :

| பாடங்கள் | தரம் | பாடங்கள் | தரம் |
|---|---|---|---|
| 1. | | 6. | |
| 2. | | 7. | |
| 3. | | 8. | |
| 4. | | 9. | |
| 5. | | 10. | |

4.2 க.பொ.த. (உ.த.) தொடர்பான விபரங்கள் :
I. பரீட்சை வருடம் மற்றும் மாதம் :-----.
II. பரீட்சை இலக்கம் :-----.
III. முடிவுகள்:

| பாடங்கள் | தரம் |
|---|---|
| 1. | |
| 2. | |
| 3. | |
| 4. | |

4.3 தொழிற்தகைமைகள் (விண்ணப்பம் கோரப்பட்டுள்ள அறிவித்தலில் உள்ள தொழிற்தகைமைகள்) :
..........................................................................................................
..........................................................................................................
..........................................................................................................

5. நீர் ஏதும் குற்றச் செயல் தொடர்பில் நீதிமன்றத்தினால் குற்றவாளியாகக் கணிக்கப்பட்டுள்ளீரா? அவ்வாறு இருப்பின் வழக்கு இலக்கம் மற்றும் திகதி என்பவற்றுடனான பூரண விபரத்தினை தருக :
..........................................................................................................
..........................................................................................................
..........................................................................................................

6. விண்ணப்பதாரரின் உறுதியுரை :

இவ்விண்ணப்பப்படிவத்தில் தரப்பட்டுள்ள தகவல்கள் உண்மையானதும் சரியானதும் என நான் இங்கு உறுதிப்படுத்துகின்றேன். இங்கு குறிப்பிடப்பட்ட ஏதாவதொரு விபரம் பொய்யானது அல்லது பிழையானதென நான் தெரிவு செய்யப்படுவதற்கு முன்னர் கண்டறியப்பட்டால் அதன் காரணமாக நான் இந்தப் பதவிக்கு தகுதியற்றவராகுவதற்கும், இந்தப் பதவிக்கு நான் தெரிவு செய்யப்பட்டதன் பின்னர் அந்தத் தவறு கண்டறியப்பட்டால் எவ்விதமான நட்டஈடும் இன்றி நான் சேவையில் இருந்து நீக்கப்படுவதற்கும் உட்படுவேன் என அறிவேன்.

______ ,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி : ______ .

7. **விண்ணப்பதாரியின் கையொப்பத்தினை உறுதிப்படுத்தல்:**
அரச பாடசாலை அதிபரொருவர்/ சமாதான நீதவானொருவர்/ சத்தியப் பிரமாண ஆணையாளரொருவர் / சட்டத்தரணியொருவர்/ பிரசித்த நொத்தாரிசு/ முப்படைகளின் அதிகாரம் பெற்ற உத்தியோகத்தரொருவர்/ பொலிஸ் சேவையில் வர்த்தமானியில் வெளியிடப்பட்ட பதவி வகிக்கும் ஒருவர் அல்லது ரூபா 37,743 இற்கு மேலதிகமான மாதாந்த மொத்தச் சம்பளம் பெறும் நிரந்தர அரச பதவி வகிக்கும் உத்தியோகத்தர் ஒருவரினால் சான்றுப்படுத்தப்பட வேண்டும்.

இவ்விண்ணப்பப்படிவத்தினைச் சமர்ப்பிக்கும் திரு./ திருமதி/ செல்வி .......(முழுப் பெயர்) அவர்களை நான் தனிப்பட்ட முறையில் அறிவேன் எனவும் ................ ஆந் திகதி அவருடைய கையொப்பத்தினை என் முன்னால் இட்டார் எனவும் சான்றுப் பகிர்கின்றேன்.

..........................................
கையொப்பத்தினை உறுதிப்படுத்துபவரின் கையொப்பம்.

கையொப்பத்தினை உறுதிப்படுத்துபவரின் முழுப்பெயர் :-----.
பதவி :-----.
முகவரி :-----.
திகதி :-----.

(உத்தியோகபூர்வ முத்திரையினால் உறுதிப்படுத்தல் வேண்டும்).

8. விண்ணப்பதாரி அரச சேவையில உள்ளவராயின் திணைக்களத் தலைவரின் சான்றிதழ் :

இவ்விண்ணப்பப்படிவத்தினைச் சமர்ப்பிக்கும் திரு./ திருமதி/ செல்வி ......... (முழுப் பெயர்) அவர்களை நான் தனிப்பட்ட முறையில் அறிவேன் எனவும் ......................... ஆந் திகதி அவருடைய கையொப்பத்தினை என் முன்னால் இட்டார் எனவும் சான்று பகிர்கின்றேன்.
அவருடைய வேலைகள், வரவு மற்றும் நடத்தை ................. எனவும் சான்றுப்பகிர்கின்றேன். தற்போதுள்ள பதவியிலிருந்து அவரை விடுவிக்க முடியும்/முடியாது எனவும் தெரிவித்துக் கொள்கிறேன்.

...........................................
திணைக்களத் தலைவரின் கையொப்பம்.

பதவி :-----.
முகவரி :-----.
திகதி :-----.

(உத்தியோகபூர்வ முத்திரையினால் உறுதிப்படுத்தல் வேண்டும்).

3 - 1058

---

## நீதிச்சேவை ஆணைக்குழு

காதி பதவி வெற்றிடங்கள்

பின்வரும் அட்டவணையில் குறிப்பிட்டுள்ள பிரதேசங்களில் நிலவும் "காதி" பதவி வெற்றிடங்களுக்கு ஆட்களைச் சேர்த்துக்கொள்வதற்காக முஸ்லிம் விவாக விவாகரத்துச் சட்டத்தின் (அத்தியாயம் 115) கீழ் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

கீழே குறிப்பிடப்படும் தகைமைகளைக் கொண்டவர்கள் இதற்கு விண்ணப்பிக்கலாம்.

விண்ணப்பதாரி முஸ்ஸிம் சமயத்தைச் சார்ந்த ஆணாக இருத்தல் வேண்டும் என்பதுடன், அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றில் பட்டம் பெற்றுள்ள பட்டதாரி ஒருவராக அல்லது முஸ்லிம் சமய மற்றும் கலாச்சார அலுவல்கள் அமைச்சினால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றினால் வழங்கப்படும் சான்றிதழ் பெற்றுள்ள மௌலவி ஒருவராக அல்லது கல்வித் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட அல் - ஆலிம் சான்றிதழ் பெற்றுள்ள ஒருவாக அல்லது சட்டத்தரணி ஒருவராக அல்லது அதற்கு சமமான தொழில்சார் தகைமையுடைய ஒருவராக அல்லது ஓய்வுபெற்ற பதவிநிலை தரத்திலான உத்தியோகத்தர் ஒருவராக இருத்தல் வேண்டும்.

தற்போது அரச சேவையில் ஈடுபட்டுள்ளவர்கள் இதற்கு விண்ணப்பிக்க தகைமையற்றவர்களாவர்.

விண்ணப்பதாரர் இஸ்லாம் மார்க்கத்தைப் பற்றி ஒழுகுபவரகவும் 40 வயதிற்கு மேற்பட்டவராகவும், நல்ல தேகாரோக்கியம் உள்ளவராகவும், நல்லொழுக்கமுள்ளவராகவும் இருக்கவேண்டியதோடு முஸ்லிம் விவாக, விவாகரத்துச் சட்டம் மற்றும் விசேடமாக முஸ்லிம் சட்டம் பற்றிய நல்ல அறிவுடையவராகவும் சமூகத்தில் நல்ல வரவேற்பும் மதிப்பும் உள்ளவராகவும், விவாகமானவராகவும் இருத்தல் வேண்டும்.

தெரிவு செய்யப்படும் அபேட்சகர் நியமனக் கடிதத்தில் குறிப்பிடப்படுகின்ற கால எல்லைக்கு நியமனம் செய்யப்படுவார்.

காதியாக நியமிக்கப்படுபவர் அப்பிரதேசத்திற்குள் நிரந்தரமாக வசிப்பவராக இருப்பது சட்டரீதியான அவசியமாகும்.

காதி ஒருவருக்கு ரூபா 7,500 மாதாந்தக் கொடுப்பனவுக்கு மேலதிகமாக உதவியாளர் சேவை, எழுதுகருவிகள் மற்றும் அஞ்சல் செலவுக்காக மாதாந்தம் ரூபா 6,250 கொடுப்பனவொன்றும் வழங்கப்படும்.

கீழே காட்டப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கமைய விண்ணப்பங்கள் 2018 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 16 ஆந் திகதி அல்லது அதற்கு முன்னர் என்னை வந்தடையுமாறு பதிவுத் தபாலில் அனுப்பி வைத்தல் வேண்டும். கடித உரையின் இடதுபக்க மேல் மூலையில் "காதி" எனக் குறிப்பிடல் வேண்டும். ஆவணங்களின் மூலப்பிரதிகள் விண்ணப்பத்துடன் அனுப்பப்படலாகாது.

ஆனந்தி கனகரத்னம்,
சிரேஷ்ட உதவிச் செயலாளர்,
நீதிச்சேவை ஆணைக்குழு.

நீதிச்சேவை ஆணைக்குழுச் செயலகம்,
த.பெ. இல. 573,
கொழும்பு 12,
2018, மாச்சு 05.

### அட்டவணை

1. கம்பஹா - கம்பஹா, அத்தனகல்ல, மீரிகம மஹர பிரதேச செயலாளர் பிரிவுகளுக்கான காதிப்பதவிக்கு முஸ்லிம் விவாக, விவாகரத்துச் சட்டத்தின் (அத்தியாயம் 115) இன்படி நீதிச்சேவை ஆணைக்குழு விண்ணப்பங்களைக் கோருகின்றது.

2. மொனராகலை - மொனராகலை மாவட்டத்தின் மொனராகலை நீதிப்பிரிவுக்கான காதிப்பதவிக்கு முஸ்லிம் விவாக, விவாகரத்துச் சட்டத்தின் (அத்தியாயம் 115) இன்படி நீதிச்சேவை ஆணைக்குழு விண்ணப்பங்களைக் கோருகின்றது.

3. பஹத ஹேவா ஹெட்ட - கண்டி மாவட்டத்தின் பஹத ஹேவா ஹெட்ட பிறப்பு, விவாக மற்றும் மரணப்பதிவு பிரிவுக்கான காதிப்பதவிக்கு முஸ்லிம் விவாக, விவாகரத்துச் சட்டத்தின் (அத்தியாயம் 115) இன் படி நீதிச் சேவை ஆணைக்குழு விண்ணப்பங்களைக் கோருகின்றது.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**1965 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க மற்றும் 1969 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்கச் சட்டங்களினால் திருத்தப்பட்ட முஸ்லிம் விவாக, விவாக நீக்கச்சட்டத்தின் (அத்தியாயம் 115 இன்) கீழ் காதிப் பதவி**

காதிப் பிரிவு:

1. முதலெழுத்துக்களுடன் பெயர்:

(உதாரணம்: இப்ராஹிம் ஏ.எல். எம்)

2. முழுப் பெயர்:

(உதாரணம்: ஆதம் லெப்பே மொஹமட் இப்ராஹிம்)

3. நிலையான வசிப்பிடம்:

4. அஞ்சல் முகவரி

5. பிறந்த திகதி: | தி | தி | மா | மா | வ | வ | வ | வ |

6. வயது:

7. இனம் :

8. சமயம்:

9. தே. அ.அ. இல. :

10. தொலை பேசி இல. :

11. கல்வித் தகைமைகள்
1. ........................................................................................................
2. ........................................................................................................
3. ........................................................................................................
4. ........................................................................................................
5. ........................................................................................................

12. தொழில் தகைமைகள்
1. ........................................................................................................
2. ........................................................................................................
3. ........................................................................................................
4. ........................................................................................................
5. ........................................................................................................

13. எழுத, வாசிக்கத் தெரிந்த மொழிகள்:

14. முஸ்லிம் சட்டம் மற்றிய அறிவுண்டா? ஆம் இல்லை

15. விவாகமானவரா? ஆம் இல்லை

16. மனைவி உயிருடன் இருக்கின்றாரா? ஆம் இல்லை

17. முன்னய தற்போதைய தொழில்கள் (திகதி விபரங்களுடன்)

| முதல் | வரை | தொழில் | இடம் |
|---|---|---|---|
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |

18. விண்ணப்பதாரிக்குரிய சொத்துக்களின் பெறுமதி: ரூபா

19. மாதாந்த வருமானம் : ரூபா

20. கடன்கள் இருப்பின் தொகை விபரம்: ரூபா

21. சென்ற 10 வருட காலப்பகுதியினுள் நீர் முனைப்பாக அரசியலில் ஈடுபட்டிருந்தீரா?: ஆம் இல்லை

22. நீர் வருமான வரி செலுத்துமொருவரா? : ஆம் இல்லை

23. உமக்கெதிராக நீதிமன்றமொன்றில் குற்றவியல் வழக்கேதும் உண்டா, இருந்ததா? : ஆம் இல்லை

24. நீதிமன்றங்களில் தண்டனை பெற்றிருப்பின் அது பற்றிய விபரங்கள்?-----.

25. உம்மைப்பற்றி நன்கறிந்துள்ள உம்மைப் பற்றிய தனிப்பட்ட விபரங்கள் பெறக்கூடியவர்கள்:

| | |
|---|---|
| பெயர்: | பெயர்: |
| | |
| முகவரி: | முகவரி: |
| | |
| தொலைபேசி இல: | தொலைபேசி இல: |
| | |
| தொழில்: | தொழில்: |
| | |
| உம்மையறிந்துள்ள காலப்பகுதி: | உம்மையறிந்துள்ள காலப்பகுதி: |
| | |

இவ்விண்ணப்பத்தில் என்னால் வழங்கப்பட்டுள்ள விபரங்கள் உண்மையானதெனவும், சரியானதெனவும் உறுதிப்படுத்துகின்றேன்.

................................ ............................................
திகதி விண்ணப்பதாரியின் கையொப்பம்

**குறிப்பு:**

அனைத்து சான்றிதழ்களினதும் பிரதிகளை இத்தோடு இணைக்கவும்.

3-1023

## அரசாங்க சேவை ஆணைக்குழு

சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு, புனர்வாழ்வளிப்பு, மீள் குடியேற்றம் மற்றும் இந்துமத அலுவல்கள் அமைச்சு

**சட்ட அலுவலர் (நிறைவேற்றுச் சேவை வகுதியின்) பதவிக்கு திறந்த அடிப்படையில் ஆட்சேர்ப்புச் செய்தல்**

சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு, புனர்வாழ்வளிப்பு, மீள் குடியேற்றம் மற்றும் இந்துமத அலுவல்கள் அமைச்சின் நிறைவேற்றுச் சேவை வகுதியின் சட்ட அலுவலர் பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்குப் பின்வரும் தகுதிகளைப் பூர்த்தி செய்துள்ள இலங்கைப் பிரசைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகிறது.

1. **ஆட்சேர்ப்புத் திட்டம்.**- அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தகுதிகளைப் பூர்த்திசெய்துள்ள விண்ணப்பதாரர்களில் அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் நியமிக்கப்படுகின்ற நேர்முகப் பரீட்சைக் குழுவொன்றினால் நடாத்தப்படும் கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சைப் பெறுபேறுகளின் அடிப்படையில் உயர் புள்ளிகளைப் பெற்றுக்கொண்ட விண்ணப்பக்காரர்களிலிருந்து காணப்படும் பதவி வெற்றிடங்களின் எண்ணிக்கைப் படி ஆட்சேர்ப்புச் செய்யப்படும். அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் அனுமதிக்கப்பட்ட (இல. 6 இன்கீழ் குறிப்பிடப்பட்டுள்ள) புள்ளி வழங்கும் திட்டத்திற்கமைய கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சை நடாத்தப்படும்.

2. **அவசியமான தகைமைகள் :**

(i) **கல்வி/ தொழில் தகைமைகள்.**- பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றிலிருந்து சட்டம் பற்றிய பட்டமொன்றைப் பெற்றிருத்தல் அல்லது உயர் நீதிமன்ற சட்டத்தரணி ஒருவராக சத்தியப்பிரமாணம் செய்திருத்தல்.

(ii) **அனுபவம்.**- சத்தியப்பிரமாணம் செய்தபின் சட்டத்தரணி ஒருவராக மூன்று (3) வருடங்களுக்குக் குறையாத முனைப்பான தொழில்சார் அனுபவத்தைப் பெற்றிருத்தல்.

(iii) **உடல் தகைமைகள்.**- விண்ணப்பதாரர் ஒவ்வொருவரும் இலங்கையின் எப்பாகத்திலும் சேவையாற்றுவதற்கும் பதவிக்குரிய கடமைகளை நிறைவேற்றுவதற்கும் போதிய உடல் மற்றும் உள ஆரோக்கியமுள்ளவராக இருத்தல் வேண்டும்.

(iv) **பிற தகைமைகள் :**

* இலங்கைப் பிரசையொருவராக இருத்தல் வேண்டும்.
* சிறந்த நன்னடத்தை உடையவராக இருத்தல் வேண்டும்.
* பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கு அவசியமான எல்லாத் தகைமைகளையும் பூர்த்திசெய்ய வேண்டுமென விண்ணப்பம் கோருவதற்கான அறிவித்தலில்/ வர்த்தமானப் பத்திரிகையில் குறிப்பிடப்படும் திகதிக்கு எல்லாவிதத்திலும் பூர்த்திசெய்திருத்தல் வேண்டும்.

3. **சேவையில் அமர்த்துவதற்கான நிபந்தனைகளும் சேவை நிபந்தனைகளும் :**

(i) இப்பதவி நிரந்தரமானதாகும். இந்நியமனம் ஓய்வூதிய உரித்துடையதாகும். தங்களுக்குரிய ஓய்வூதியத் திட்டம் பற்றி அரசாங்கத்தினால எதிர்காலத்தில் எடுக்கப்படும் கொள்கைத் தீர்மானத்திற்கு தாங்கள் கட்டுப்பட்டவராவீர்கள். மேலும், விதவைகள், அனாதைகள் ஓய்வூதியத் திட்டத்திற்கு/ தபுதாரர்கள்/ அநாதைகள்? ஓய்வூதியத்திற்கு தாங்கள் உதவுதொகை செலுத்துதல் வேண்டும். அரசாங்கத்தினால் இடைக்கிடை விதித்துரைக்கப்படும் விரதமான தாங்கள் அதற்கு உதவுதொகை செலுத்துதல் வேண்டும்.

(ii) நியமனம் 3 வருட நன்னடத்தைக் காலத்திற்குட்பட்டதாகும். சட்ட அலுவலர் தரம் III இற்கு ஆட்சேர்ப்புச் செய்யப்பட்டு 3 வருட காலத்துள் ஆட்சேர்ப்புத் திட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு I ஆவது வினைத் திறன்காண் தடைப் பரீட்சையில் சித்தியடைதல் வேண்டும்.

(iii) 2014.01.21 ஆந் திகிய, 01/ 2014 ஆம் இலக்க அரசாங்க நிர்வாக சுற்றறிக்கையின் பிரகாரம் பதவியில் இணைந்து 05 வருட காலத்துக் சேவையில் இணைந்து கொண்ட மொழிக்கு மேலதிகமாக மற்றைய அரச கரும மொழியில் போதிய தேர்ச்சியைப் பெற்றுக் கொள்ளல் வேண்டும் என்பதுடன், ஓர் அரச கரும மொழி அல்லாத மொழி மூலமொன்றில் சேவையில் இணைந்து கொண்ட அலுவலர்கள் தமது நன்னடததை காலத்துள் உரி அரச கருமமொழித் தேர்ச்சியைப் பெற்றுக் கொள்ள வேண்டும்.

(iv) அரசாங்க சேவை ஆணைக்குழுவின் செயலொழுங்கு விதிகளுக்கும், இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிக் கோவைக்கும், அரசாங்க நிதி ஒழுங்கு விதிகளுக்கும், திணைக்களத்தின் பிற ஒழுங்கு விதிகளுக்கும் இந்நியமனம் கட்டுப்பட்டதாகும்

4. **வயதெல்லை.**- விண்ணப்பதாரர்கள் விண்ணப்பங்களை ஏற்றுக்கொள்ளும் இறுதித் திகதிக்கு 21 வயதுக்குக் குறையாதவர்களாகவும் 45 வயதுக்கு மேற்படாதவர்களாகவும் இருத்தல் வேண்டும்.

5. **சம்பள அளவுத்திட்டம்.**- 2016.02.25 ஆந் திகதியிட்ட 03/2016 ஆம் இலக்க அரசாங்க நிர்வாக சுற்றறிக்கையின் அட்டவணை I இன் பிரகாரம் ரூபா 47,615 - 10 x 1,335 - 8 x 1,630 - 17 x 2,170 - ரூபா 1,10,895 (SL 1-2016) மாதாந்த சம்பள அளவுத் திட்டமொன்று இப்பதவிக்கு உரித்தாகும். இச்சுற்றறிக்கையின் ஏற்பாடுகளுக்கு அமைவாக அதன் அட்டவணை II இல் குறிப்பிடப்பட்டவாறு தங்களுக்கு சம்பளம் வழங்கப்படும்.

6. பின்வரும் புள்ளி வழங்கும் திட்டம் கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சைக்கு அடிப்படையாகக் கொள்ளப்படும்:

| தொடர் இல. | விடயம் | புள்ளிகள் | கூடிய புள்ளிகள் |
|---|---|---|---|
| 01 | **மேலதிக கல்வித் தகைமைகள்** | | **20** |
| | பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழுவினால் ஏற்றங்கீகரிக்கப்பட்ட பல்கலைக் கழகமொன்றிலிருந்து பெற்றுக் கொண்ட சட்டம் தொடர்பிலான பட்டம். | | |
| | - முதல் வகுப்பு சித்தியொன்றுக்கு | 20 | |
| | - இரண்டாம் வகுப்பு உயர் சித்தியொன்றுக்கு | 15 | |
| | - இரண்டாம் வகுப்பு கீழ்மட்ட சித்தியொன்றுக்கு | 10 | |
| | சட்டக் கல்லூரியில் இறுதியாண்டின் முதல் வகுப்பு சித்தியொன்றுக்கு | 15 | |
| | சட்டக் கல்லூரியில் இறுதியாண்டின் இரண்டாம் வகுப்பு சித்தியொன்றுக்கு | 10 | |
| | **குறிப்பு:**- சிறப்பு சித்தியொன்றுடன் இறுதிப்பரீட்சையில் சித்தியடைந்திருப்பின் மட்டும் 10 புள்ளிகள் வழங்கப்படல் வேண்டும். | | |
| | (உயர்ந்த தகைமைகளுக்கு மட்டும் புள்ளிகள் வழங்கப்படும். பட்டம் அல்லது சட்டக் கல்லூரி தகைமைகளில் ஒன்றுக்கு மட்டும்.) | | |
| 02 | **மேலதிக தொழில்சார் தகைமைகள்** | | **15** |
| | பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் ஏற்றங்கீகரிக்கப்பட்ட நிறுவன மொன்றினால் வழங்கப்பட்ட குறித்து துறை தொடர்பான ஒரு வருடத்துக்குக் குறையாத பட்டப்பின்படிப்பு டிப்ளோமா கற்கைநெறி யொன்றுக்கு அல்லது பட்டப்பின்படிப்பு சட்டத்துறை டிப்ளோமா கற்கை நெறி ஒன்றுக்கு (டிப்ளோமா ஒன்றிற்கு 5 புள்ளிகள் வீதம் - உயர்ந்த பட்சம் 15 புள்ளிகள்) | | |
| | அரசாங்கத்தினால் ஏற்றங்கீகரிக்கப்பட்ட நிறுவன மொன்றினால் வழங்கப்பட்ட குறித்து துறை தொடர்பான 06 மாதங்களுக்குக் குறையாத டிப்ளோமா கற்கை நெறி ஒன்றுக்கு (டிப்ளோமா ஒன்றுக்கு 03 புள்ளிகள் வீதம் - உயர்ந்த பட்சம் 15 புள்ளிகள்) | | |
| | அரசாங்கத்தினால் ஏற்றங்கீகரிக்கப்பட்ட நிறுவன மொன்றினால் வழங்கப்பட்ட குறித்து துறையில் 03 மாதங்களுக்குக் குறையாத சான்றிதழ் கற்கைநெறி ஒன்றுக்கு (டிப்ளோமா ஒன்றுக்கு 02 புள்ளிகள் வீதம் - உயர்ந்த பட்சம் 10 புள்ளிகள்) | | |
| 03 | **மேலதிக அனுபவம்** | | **30** |
| | சட்டத்தரணி ஒருவராக அரசாங்க சேவையில அல்லது தனியார் துறையில் பெற்றுள்ள அனுபவம் - -6 மாதங்களுக்கு கூடுதலானதும். ஒரு வருடத்திற்குக் குறைவானதும் - 02 புள்ளிகள். வருடம் ஒன்றுக்கு 05 புள்ளிகள் வீதம் உர்ந்த பட்சம் 30 புள்ளிகள். | | |
| | (அடிப்படைத் தகுதியைப் பெற்றுக் கொள்வதற்கு அவசியமான சட்டத்தரணி ஒருவராகப் பணியாற்றிய 03 வருட சேவைக் காலம் தவிர) | | |
| | (20 வருடங்களுக்குக் குறையாத சேவைக்காலமொன்றைப் பூர்த்தி செய்துள்ள சட்டத்தரணி ஒருவரிடமிருந்து அல்லது சனாதிபதி சட்டத்தரணி ஒருவரிடமிருந்து அல்லது நீதிபதி ஒருவரிடமிருந்து பெற்றுக் கொண்ட சான்றிதழ் ஒன்றின் மூலம் மேலதிக அனுபவத்தை நிரூபித்தல் வேண்டும். | | |
| 04 | **ஆங்கில மொழித் தேர்ச்சி** | | **15** |
| | ஆங்கில மொழி மூலம் பயின்ற பட்டப்பின்படிப்பு பட்டம் / பட்டம்/ பட்டப்பின்படிப்பு சட்டமாணி பட்டம்/சட்டமாணி பட்டம் | 15 | |
| | (குறித்த பரீட்சை வினாப்பத்திரங்கள் அனைத்திற்கும் ஆங்கில மொழியில் பதிலளிக்கப்பட்டிருத்தல் வேண்டும்.) | | |
| | பல்கலைகழக மானியங்கள் ஆணைக்குழுவினால் ஏற்றங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றின் அல்லது அரசாங்கத்தினால் ஏற்றங்கீகரிக்கப்பட்ட நிறுவனம் ஒன்றின் ஆங்கில மொழி பற்றிய டிப்ளோமா கற்கை நெறி ஒன்றுக்கு (01 வருடம் அல்லது 1500 மணித்தியாலங்கள்) | 10 | |
| | பல்கலைகழக மானியங்கள் ஆணைக்குழுவினால் ஏற்றங்கீகரிக்கப்பட்ட பல்கலைக் கழகம் ஒன்றின் அல்லது அரசாங்கத்தினால் ஏற்றங்கீகரிக்கப்பட்ட நிறுவனம் ஒன்றின் ஆங்கில மொழி பற்றிய சான்றிதழ் கற்கைநெறி ஒன்றுக்கு | | |
| | - 06 மாதங்கள் /720 மணித்தியாலங்கள் | 07 | |
| | - 03 மாதங்கள் /360 மணித்தியாலங்கள் | 05 | |
| 05 | **தகவல் தொழில்நுட்பம் தொடர்பான அறிவு** | | **15** |
| | பல்கலைக்கழக மாணியங்கள் ஆணைக்குழுவினால் ஏற்றங்கீகரிக்கப்பட்ட பல்கலை கழகம் ஒன்றின் பட்டமொன்றுக்காக தகவல் தொழில்நுட்பவியலை பிரதான பாடமொன்றாகக் கொண்டு கற்றிருத்தல். | 15 | |
| | அரசாங்கத்தினால் ஏற்றங்கீகரிக்கப்பட்ட நிறுவனம் ஒன்றில் 01 வருடத்திற்குக் குறையாத தகவல் தொழில்நுட்பவியல் பற்றிய டிப்ளோமா கற்கைநெறி ஒன்றுக்கு 1500 மணித்தியாலங்களுக்கு | 10 | |
| | அரசாங்கத்தினால் ஏற்றங்கீகரிக்கப்பட்ட தகவல் தொழில்நுட்பவியல் பற்றிய சான்றிதழ் கற்கைநெறி ஒன்றுக்கு | | |
| | - 06 மாதங்கள் /720 மணித்தியாலங்கள் | 07 | |
| | - 03 மாதங்கள் /360 மணித்தியாலங்கள் | 05 | |
| 06 | **நேர்முகப்பரீட்சையில் காட்டும் திறமைகளுக்கு** | | **05** |
| | **மொத்தம்** | | **100** |

7. **அபேட்சகர்களின் ஆளடையாளம்.**- எல்லா விதத்திலும் பூர்த்தியான விண்ணப்பப்படிவங்களைச் சமர்ப்பித்துள்ள அபேட்சகர்கள் மட்டும் கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுவர்.

எல்லாச் சான்றிதழ்களின் மூலப்பிரதிகளையும் உரிய முறையில் அத்தாட்சிப்படுத்திய பிரதிகளையும் நேர்முகப் பரீட்சையின் போது சமர்ப்பித்தல் வேண்டும்.

நேர்முகப் பரீட்சையின்போது தமது ஆளடையாளத்தை உறுதிப்படுத்துவதற்கு பின்வரும் ஆளடையாளப் பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் :-

(i) ஆட்பதிவு ஆணையாளரினால் வழங்கப்பட்ட தேசிய ஆள் அடையாள அட்டை ;
(ii) செல்லுபடியான கடவுச்சீட்டு.

8. **விண்ணப்பித்தல் :**

(அ) விண்ணப்பப்படிவங்கள் 2018.04.23 ஆந் திகதி அல்லது அத்தினத்திற்கு முன்னர் பின்வரும் முகவரிக்குக் கிடைக்கக்கூடியதாக பதிவுத்தபாலில் அனுப்பி வைக்கப்படல் வேண்டும். அத்திகதிக்குப் பிந்திக் கிடைக்கும் விண்ணப்பப்படிவங்கள் நிராகரிக்கப்படும்.

செயலாளர்,
சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு, புனர்வாழ்வளிப்பு,
மீள் குடியேற்றம் மற்றும் இந்துமத அலுவல்கள்
அமைச்சு,
இல. 356, காலி வீதி,
கொழும்பு 3.”

(ஆ) விண்ணப்பப்படிவங்களை இட்டு அனுப்பிவைக்கும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் "சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு, புனர்வாழ்வளிப்பு, மீள்குடியேற்றம் மற்றும் இந்துமத அலுவல்கள் அமைச்சின் சட்ட அலுவலர் பதவிக்கு விண்ணப்பித்தல்" எனக் குறிப்பிடப்படுதல் வேண்டும்.

(இ) விண்ணப்பப்படிவத்தில் அபேட்சகரின் கையொப்பம் அரசாங்கப் பாடசாலையொன்றின அதிபரொருவர்/ சமாதான நீதவானொருவர்/ சத்தியப்பிரமாண ஆணையாளர் ஒருவர்/ சட்டத்தரணி ஒருவர்/ பிரசித்த நொத்தாரிசு ஒருவர்/ முப்படைகளின் ஆணைபெற்ற அலுவலர் ஒருவர் அல்லது ரூபா 47,615 மாதாந்த திரட்டிய சம்பளம் பெறும் அரசாங்க நிரந்தரப் பதவியொன்றை வகிக்கின்ற அலுவலர் ஒருவரினால் அத்தாட்சிப்படுத்தப்படல் வேண்டும்.

(ஈ) தற்போது அரசாங்க சேவையில் அல்லது மாகாண அரசாங்க சேவையில் ஈடுபட்டுள்ள அலுவலர்கள் தமது விண்ணப்பப்படிவங்களைத் தாம் சேவையாற்றும் திணைக்களத்தின் தலைவர் ஊடாகச் சமர்ப்பித்தல் வேண்டும்.

(உ) இத்துடன் இணைக்கப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்தைத் தழுவி அமையாத விண்ணப்பப்படிவங்கள் நிராகரிக்கப்படும். விண்ணப்பப்படிவங்கள் காணாமல் போதல் அல்லது தாமதமடைதல் தொடர்பான முறைப்பாடுகள் எவையும் கருத்திற்கொள்ளப்பட மாட்டா.

(ஊ) சமர்ப்பிக்கப்பட வேண்டிய விண்ணப்பப்பத்திரத்தின் மாதிரியமைப்பு இவ்வறிவித்தலின் இறுதியில் தரப்பட்டுள்ளது. விண்ணப்பகாரர்கள் தமது விண்ணப்பப்படிவங்களை A4 அளவிலான தாளில் (அதன் முதற்பக்கத்தை இல. 1 முதல் 6 வரைக்கும், 2 ஆவது பக்கத்தை இல. 7 முதல் 10 வரைக்கும், எஞ்சியவற்றை 3 ஆவது பக்கத்திற்கும் என்ற வகையில்) தயாரித்து தமது சொந்தக் கையெழுத்தில் பூர்த்திசெய்தல் வேண்டும்.

(எ) இப்பதவிக்கான ஆட்சேர்ப்பு நடவடிக்கை முறையையும் மேலதிக விபரங்களையும் இவ்வமைச்சின் resettlementmin.gov.lk என்ற இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்.

9. **பிழையான தகவல்களை வழங்கல்.**- தங்களால் அனுப்பிவைக்கப்பட்ட விண்ணப்பப்படிவத்தில் குறிப்பிடப்பட்டுள்ள யாதேனுமொரு தகவல் உண்மைக்குப் புறம்பானதென்றோ அல்லது தவறானதென்றோ ஆட்சேர்ப்பிற்கு முன்னர் தெரியவரின், தங்கள் அபேட்சக அந்தஸ்து இரத்துச் செய்யப்படும். அவ்வாறான போலியான அல்லது தவறான தகவலொன்று பற்றி ஆட்சேர்ப்புச் செய்யப்பட்ட பின்னர் தெரியவரின், உரிய நடவடிக்கை முறையைப் பின்பற்றி பணிநீக்கம் செய்யப்படும்.

10. இப்பதவி வெற்றிடத்தை நிரப்புதல் அல்லது நிரப்பாமல் விடும் உரிமை அரசாங்க சேவை ஆணைக்குழுவுக்கு உண்டு.

அரசாங்க சேவை ஆணைக்குழுவின் கட்டளைப்படி,

செயலாளர்,
சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு,
புனர்வாழ்வளிப்பு, மீள்குடியேற்றம்
மற்றும் இந்துமத அலுவல்கள் அமைச்சு.

கொழும்பு 3.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு, புனர்வாழ்வளிப்பு, மீள்குடியேற்றம் மற்றும் இந்துமத அலுவல்கள் அமைச்சின் நிறைவேற்றுச் சேவை வகுதியின் சட்ட அலுவலர் பதவிக்கு திறந்த அடிப்படையில் ஆட்சேர்ப்புச் செய்தல்**

இல. ..................................
(அலுவலகப் பாவனைக்கு)

1. முதலெழுத்துக்களுடனான பெயர் (திரு./திருமதி/செல்வி) :-
சிங்களத்தில்/தமிழில் :----.
ஆங்கிலத்தில் :----.

1.1 முதலெழுத்துக்களினால் குறிக்கப்படும் பெயர்கள் (தெளிவான எழுத்துக்களில்) :
சிங்களத்தில்/தமிழில் :----.
ஆங்கிலத்தில் :----.

2. தேசிய ஆள் அடையாள அட்டை இல. : ☐☐☐☐☐☐☐☐☐☐

3. பிறந்த திகதி :
வருடம் : ☐☐☐☐ மாதம்: ☐☐ திகதி : ☐☐

3.1 விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதிக்கு வயது :
வருடங்கள் : ☐☐ மாதங்கள் : ☐☐ நாட்கள் : ☐☐

4. பால் : (ஆண்-M, பெண்-F) :- ☐
(பொருத்தமான எழுத்தை கூட்டில் இடுக)

5. நிரந்தர முகவரி(தெளிவான எழுத்துக்களில்) : ----.

6. தொலைபேசி இலக்கம் :
நிலையான :----.
கையடக்க :----.

7. கல்வித் தகைமைகள் :

7.1 க. பொ. த. (உ. த.) பரீட்சை பற்றிய விபரங்கள் :

(i) பரீட்சைக்குத் தோற்றிய வருடமும் மாதமும் :----.
(ii) சுட்டெண் :----.
(iii) சித்தியடைந்த பாடங்கள் :-

| பாடம் | தரம் |
|---|---|
| | |
| | |
| | |
| | |

7.2 பெற்றுக்கொண்ட பட்டம் பற்றிய விபரங்கள் :

(i) பல்கலைக்கழகம் :----.
(ii) பட்டம் பெற்ற வருடம் :----.
(iii) பெற்றுக்கொண்ட பட்டம் :----.

8. அனுபவம் :

(i) உயர் நீதிமன்ற சட்டத்தரணி ஒருவராகப் பணியாற்றியுள்ள காலம் :----.

9. தாங்கள் எப்பொழுதாவது, ஏதேனும் குற்றச்சாட்டுக்கு நீதிமன்றமொன்றினால் குற்றவாளியாக்கப்பட்டுள்ளீரா?: ஆம்/இல்லை.

9.1 ஆம் எனின், விபரிக்கவும் :----.

10. விண்ணப்பதாரரின் உறுதியுரை :

(அ) இவ்விண்ணப்பப்படிவத்தில் என்னால் தரப்பட்டுள்ள தகவல்கள் எனது அறிவுக்கு எட்டியவரையில் உண்மையானவை என்றும் சரியானவை என்றும் வெளிப்படுத்துகின்றேன்.

(ஆ) என்னால் தரப்பட்டுள்ள வெளிப்படுத்துகை உண்மைக்குப் புறம்பானதென நிரூபிக்கப்படுமாயின், நான் சேவைக்கு உள்ளீர்க்கப்படுவதற்குத் தகுதியற்றவனாவேன் என்பதையும் நியமனம் கிடைத்த பின் அவ்வாறு நிரூபிக்கப்படுமாயின், பணி நீக்கம் செய்யப்படுவதற்கு உள்ளாவேன் என்பதையும் அறிவேன்.

(இ) இதனகத்துள்ள தகவல் எதனையும் பின்பு மாற்றியமைக்கமாட்டேன்.

----,
விண்ணப்பதாரரின் கையொப்பம்.

திகதி :----.

11. விண்ணப்பதாரரின் கையொப்பத்தை உறுதிப்படுத்தல் :

இவ்விண்ணப்பப்படிவத்தைச் சமர்ப்பிக்கும் ..................................................... என்பவரை நான் தனிப்பட்ட முறையில் அறிவேன் என்பதையும் அவர் ....................................... ஆந் திகதி எனது முன்னிலையில் மேற்படி பந்தி 10 இன்கீழ் கையொப்பமிட்டார் என்பதையும் உறுதிப்படுத்துகின்றேன்.

----,
உறுதிப்படுத்துபவரின் கையொப்பம்.

திகதி :----.

உறுதிப்படுத்துபவரின் பெயர் :----.
பதவி :----.
முகவரி :----.
(பதவி வழி இலச்சினை மூலம் உறுதிப்படுத்தவும்) :

12. திணைக்களத் தலைவரின் சான்றிதழ் :
(அரசாங்க/மாகாண அரசாங்க சேவையிலுள்ள விண்ணப்பதாரர்களுக்கு மட்டும்)

12.1 அலுவலரின் பெயர்வழிக் கோப்பின்படி விண்ணப்பப்படிவத்தை ஏற்றுக்கொள்ளும் இறுதித் திகதிக்கு உடனடுத்த ஐந்து வருட காலத்துள் வேலை, நடத்தை, வருகை என்பன திருப்திகரமானது/ திருப்திகரமற்றது. சகல சம்பள ஏற்றங்களும் ஈட்டப்பட்டுள்ளன/ ஈட்டப்படவில்லை. எந்தவொரு ஒழுக்காற்றுத் தண்டனைக்கும் உட்படுத்தப்படவில்லை/உட்படுத்தப்பட்டுள்ளது.

12.2 விண்ணப்பிக்கும் பதவிக்கு தெரிவுசெய்யப்படின், தற்போதைய பதவியிலிருந்து இந்த அலுவலரை விடுவிக்க முடியும்/முடியாது. விண்ணப் பப்படிவத்தைச் சிபார்சு செய்கின்றேன்/சிபார்சு செய்யவில்லை.

----,
திணைக்களத் தலைவரின் கையொப்பமும்
பதவி வழி இலச்சினையும்.

திகதி :----.

3-930

---

**பதிவாளர் நாயகம் திணைக்களம்**

பிறப்பு மற்றும் இறப்பு பதிவாளர் பதவி - நுவரெலியா மாவட்டம்

இங்கு கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்ட பிரிவில் உள்ள பிறப்பு மற்றும் இறப்பு மற்றும் விவாகம்/மேலதிக விவாகப் பதிவாளர் பதவிக்காக விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. விண்ணப்பதாரர்கள் உரிய பிறப்பு மற்றும் இறப்பு பதிவு செய்யும் பிரிவினுள் நிரந்தர வதிவிடதாரியாகவும் மற்றும் போதியளவான ஆதனத்திற்கு உரித்தான பிரதேசவாசிகளின் மதிப்பினைப் பெறுபவராகவும் இருத்தல் வேண்டும்.

2. இப்பதவிக்காக ஆண்/பெண் இருபாலாரும் விண்ணப்பிக்க முடியும்.

3. விண்ணப்பதாரரின் வயது 45 வருடங்களுக்குக் குறையாததாக இருத்தல் வேண்டும் என்பதுடன் வயது 62 வருடங்களுக்கு மேற்படாததாகவும் இருத்தல் வேண்டும்.

4. விண்ணப்பம் கோரப்படும் பிறப்பு மற்றும் இறப்பு பதிவு செய்தல் பிரிவிற்கு உட்புகுத்தப்படும் கிராம பட்டியல்கள் /கிராம அலுவலர் பிரிவு, கல்வி மற்றும் ஏனைய தகைமைகள் ஆகிய மேலதிக விபரங்கள் கீழ் குறிப்பிடப்படும் அட்டவணையில் குறிப்பிடப்பட்ட மாவட்ட செயலகம், பிரதேச செயலகம் அல்லது உரிய காணி மற்றும் மாவட்ட செயலகம், கிராம அலுவலர் அலுவலகம், சமூர்த்தி அபிவிருத்திச் சங்க அலுவலகம் மற்றும் தபால் அலுவலகம் ஆகிய பிரிவின் பிரசித்தமான இடங்களில் காட்சிப்படுத்தப்பட்டுள்ள அறிவித்தல்களில் பார்த்துக் கொள்ள இயலும்.

5. இதற்காக தேவையான விண்ணப்பங்கள் மற்றும் கிராம பட்டியல்கள்/ கிராம அலுவலர் பிரிவுகள் உள்ளடங்கிய "இணைப்பு 1" உரிய மாவட்டத்தின் மாவட்ட செயலாளர் (அரசாங்க அதிபர்) அலுவலகத்தில் மற்றும் உரிய காணி மற்றும் மாவட்ட பதிவகத்தில் அல்லது பிரதேச செயலகத்தில் பெற்றுக்கொள்ள இயலும்.

6. பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் 2018.05.07 ஆந் திகதி அல்லது அதற்கு முன்பு அட்டவணையில் குறிப்பிடப்பட்ட முகவரிக்கு கிடைக்குமாறு பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும்.

நீல் த அல்விஸ்,
பதிவாளர் நாயகம்.

பதிவாளர் நாயகம் திணைக்களம்,
இல. 234/A3, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை,
பத்தரமுல்லை,
2018, மாச்சு 14.

**அட்டவணை**

| மாவட்டம் | பிரதேச செயலாளர் பிரிவு | விண்ணப்பம் கோரப்படும் பிரிவும் பதவியும் | விண்ணப்பம் அனுப்பப்பட வேண்டிய முகவரி |
|---|---|---|---|
| நுவரெலியா | அம்பகமுவ | ஹட்டன் டிக்கோயா பிரிவின் பிறப்பு மற்றும் இறப்பு பதிவாளர் பதவி (சிங்கள மொழி மூலம்) | மாவட்ட செயலாளர்/ மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்டச் செயலகம், நுவரெலியா |

3-1271

**பதிவாளர் நாயகம் திணைக்களம்**

தமிழ்மொழி மூலம் பிறப்பு, இறப்பு மற்றும் விவாகம்/மேலதிக விவாகப் பதிவாளர் பதவி - முல்லைத்தீவு மாவட்டம்

இங்கு கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்ட பிரிவில் உள்ள பிறப்பு, இறப்பு மற்றும் விவாகம்/மேலதிக விவாகப் பதிவாளர் பதவிக்காக விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. விண்ணப்பதாரர்கள் உரிய பிறப்பு, இறப்பு மற்றும் விவாகம்/ மேலதிக விவாகப் பிரிவினுள் நிரந்தர வதிவிடதாரியாகவும் மற்றும் போதியளவான ஆதனத்திற்கு உரித்தான பிரதேசவாசிகளின் மதிப்பினைப் பெறுபவராகவும் இருத்தல் வேண்டும்.

2. இப்பதவிக்காக ஆண்/பெண் இருபாலாரும் விண்ணப்பிக்க முடியும்.

3. விண்ணப்பதாரரின் வயது 45 வருடங்களுக்குக் குறையாததாக இருத்தல் வேண்டும் என்பதுடன் வயது 62 வருடங்களுக்கு மேற்படாததாகவும் இருத்தல் வேண்டும்.

4. விவாகப் பதிவாளர் பதவிக்காக விண்ணப்பிப்பவர்கள் திருமணமானவராக இருத்தல் வேண்டும் என்பதுடன் திருமணமாகி 05 வருடங்களுக்கு குறையாததாக இருத்தல் வேண்டும். விதவைகள்/ தபுதாரர் அல்லது விவாகரத்தவராயிருத்தல் கூடாது.

5. விண்ணப்பம் கோரப்படும் பிறப்பு மற்றும் இறப்பு பதிவு செய்தல் பிரிவிற்கு உட்புகுத்தப்படும் கிராம பட்டியல்கள் /கிராம அலுவலர் பிரிவு கல்வி மற்றும் ஏனைய தகைமைகள் ஆகிய மேலதிக விபரங்கள் கீழ் குறிப்பிடப்படும். அட்டவணையில் குறிப்பிடப்பட்ட மாவட்ட செயலகம், பிரதேச செயலகம் அல்லது உரிய காணி மற்றும் மாவட்ட செயலகம், கிராம அலுவலர் அலுவலகம், சமூர்த்தி அபிவிருத்தி சங்க அலுவலகம் மற்றும் தபால் அலுவலகம் ஆகிய பிரிவின் பிரசித்தமான இடங்களில் காட்சிப்படுத்தப்பட்டுள்ள அறிவித்தல்களில் பார்த்துக் கொள்ள இயலும்.

6. இதற்காக தேவையான விண்ணப்பங்கள் மற்றும் கிராம பட்டியல்கள்/ கிராம அலுவலர் பிரிவுகள் உள்ளடங்கிய "இணைப்பு 1" உரிய மாவட்டத்தின் மாவட்ட செயலாளர் (அரசாங்க அதிபர்) அலுவலகத்தில் மற்றும் உரிய காணி மற்றும் மாவட்ட பதிவகத்தில் அல்லது பிரதேச செயலகத்தில் பெற்றுக் கொள்ள இயலும்.

7. பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் 2018.05.07 ஆந் திகதி அல்லது அதற்கு முன்பு/ அட்டவணையில் குறிப்பிடப்பட்ட முகவரிக்கு கிடைக்குமாறு பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும்.

நீல் த அல்விஸ்,
பதிவாளர் நாயகம்.

பதிவாளர் நாயகம் திணைக்களம்,
இல. 234/A3, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை,
பத்தரமுல்லை,
*2018, மாச்சு 14.*

**அட்டவணை**

| மாவட்டம் | பிரதேச செயலாளர் பிரிவு | விண்ணப்பம் கோரப்படும் பிரிவும் பதவியும் | விண்ணப்பம் அனுப்பப்பட வேண்டிய முகவரி |
|---|---|---|---|
| முல்லைத்தீவு | மாந்தை கிழக்கு | புனகங்காமம் பிரிவில் பிறப்பு/ இறப்பு மற்றும் மாந்தை கிழக்கு பிரிவில் விவாகப் (பொது)() பதிவாளர் பதவி (தமிழ்) | மாவட்ட செயலாளர் மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்ட செயலகம், முல்லைத்தீவு |

3-1272

---

**பதிவாளர் நாயகம் திணைக்களம்**

பிறப்பு மற்றும் இறப்பு பதிவாளர் பதவி - கேகாலை மாவட்டம்

இங்கு கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்ட பிரிவில் உள்ள பிறப்பு மற்றும் இறப்பு பதிவாளர் பதவிக்காக விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. விண்ணப்பதாரர்கள் உரிய பிறப்பு மற்றும் இறப்பு பிரிவினுள் நிரந்தர வதிவிடதாரியாகவும் மற்றும் போதியளவான ஆதனத்திற்கு உரித்தான பிரதேசவாசிகளின் மதிப்பினைப் பெறுபவராகவும் இருத்தல் வேண்டும்.

2. இப்பதவிக்காக ஆண்/பெண் இருபாலாரும் விண்ணப்பிக்க முடியும்.

3. விண்ணப்பதாரரின் வயது 45 வருடங்களுக்குக் குறையாததாக இருத்தல் வேண்டும் என்பதுடன் வயது 62 வருடங்களுக்கு மேற்படாததாகவும் இருத்தல் வேண்டும்.

4. விண்ணப்பம் கோரப்படும் பிறப்பு மற்றும் இறப்பு பதிவு செய்தல் பிரிவிற்கு உட்புகுத்தப்படும் கிராம பட்டியல்கள் /கிராம அலுவலர் பிரிவு கல்வி மற்றும் ஏனைய தகைமைகள் ஆகிய மேலதிக விபரங்கள் கீழ் குறிப்பிடப்படும். அட்டவணையில் குறிப்பிடப்பட்ட மாவட்ட செயலகம், பிரதேச செயலகம் அல்லது உரிய காணி மற்றும் மாவட்ட செயலகம், கிராம அலுவலர் அலுவலகம், சமூர்த்தி அபிவிருத்தி சங்க அலுவலகம் மற்றும் தபால் அலுவலகம் ஆகிய பிரிவின் பிரசித்தமான இடங்களில் காட்சிப்படுத்தப்பட்டுள்ள அறிவித்தல்களில் பார்த்துக் கொள்ள இயலும்.

5. இதற்காக தேவையான விண்ணப்பங்கள் மற்றும் கிராம பட்டியல்கள்/ கிராம அலுவலர் பிரிவுகள் உள்ளடங்கிய "இணைப்பு 1" உரிய மாவட்டத்தின் மாவட்ட செயலாளர் (அரசாங்க அதிபர்) அலுவலகத்தில் மற்றும் உரிய காணி மற்றும் மாவட்ட பதிவகத்தில் அல்லது பிரதேச செயலகத்தில் பெற்றுக் கொள்ள இயலும்.

6. பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் 2018.05.07 ஆந் திகதி அல்லது அதற்கு முன்பு/ அட்டவணையில் குறிப்பிடப்பட்ட முகவரிக்கு கிடைக்குமாறு பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும்.

நீல் த அல்விஸ்,
பதிவாளர் நாயகம்.

பதிவாளர் நாயகம் திணைக்களம்,
இல. 234/A3, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை,
பத்தரமுல்லை,
*2018, மாச்சு 14.*

**அட்டவணை**

| மாவட்டம் | பிரதேச செயலாளர் பிரிவு | விண்ணப்பம் கோரப்படும் பிரிவும் பதவியும் | விண்ணப்பம் அனுப்பப்பட வேண்டிய முகவரி |
|---|---|---|---|
| கேகாலை | கேகாலை | கேகாலை நகர (வைத்திய) பிரிவின் பிறப்பு, இறப்பு பதிவாளர் பதவி. | மாவட்ட செயலாளர்/ மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்ட செயலகம், கேகாலை |

3-1273

**பதிவாளர் நாயகம் திணைக்களம்**

பிறப்பு, இறப்பு பதிவாளர் பதவி - பதுளை மாவட்டம்

இங்கு கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்ட பிரிவில் உள்ள பிறப்பு மற்றும் இறப்பு பதிவாளர் பதவிக்காக விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. விண்ணப்பதாரர்கள் உரிய பிறப்பு மற்றும் இறப்பு பதிவு செய்தல் பிரிவினுள் நிரந்தர வதிவிடதாரியாகவும் மற்றும் போதியளவான ஆதனத்திற்கு உரித்தான பிரதேசவாசிகளின் மதிப்பினைப் பெறுபவராகவும் இருத்தல் வேண்டும்.

2. இப்பதவிக்காக ஆண்/பெண் இருபாலாரும் விண்ணப்பிக்க முடியும்.

3. விண்ணப்பதாரரின் வயது 45 வருடங்களுக்குக் குறையாததாக இருத்தல் வேண்டும் என்பதுடன் வயது 62 வருடங்களுக்கு மேற்படாததாகவும் இருத்தல் வேண்டும்.

4. விண்ணப்பம் கோரப்படும் விவாகம் பிறப்பு மற்றும் இறப்பு பதிவு செய்தல் பிரிவிற்கு உட்புகுத்தப்படும் கிராம பட்டியல்கள் கிராம அலுவலர் பிரிவு கல்வி மற்றும் ஏனைய தகைமைகள் ஆகிய ஏனைய விபரங்கள் கீழ் குறிப்பிடப்படும். அட்டவணையில் குறிப்பிடப்பட்ட மாவட்ட செயலகம், பிரதேச செயலகம், அல்லது உரிய காணி மற்றும் மாவட்ட செயலகம், கிராம அலுவலர் அலுவலகம், சமூர்த்தி அபிவிருத்தி சங்க அலுவலகம் மற்றும் தபால் அலுவலகம் ஆகிய பிரிவின் பிரசித்தமான இடங்களில் காட்சிப்படுத்தப்பட்டுள்ள அறிவித்தல்களில் பார்த்துக் கொள்ள இயலும்.

5. இதற்காக தேவையான விண்ணப்பங்கள் மற்றும் கிராம பட்டியல்கள்/ கிராம அலுவலர் பிரிவுகள் உள்ளடங்கிய "இணைப்பு 1" உரிய மாவட்டத்தின் மாவட்ட செயலாளர் (அரசாங்க அதிபர்) அலுவலகத்தில் மற்றும் உரிய காணி மற்றும் மாவட்ட பதிவகத்தில் அல்லது பிரதேச செயலகத்தில் பெற்றுக் கொள்ள இயலும்.

6. பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் 2018.05.07 ஆந் திகதி அல்லது அதற்கு முன்பு/ அட்டவணையில் குறிப்பிடப்பட்ட முகவரிக்கு கிடைக்குமாறு பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும்.

நீல் த அல்விஸ்,
பதிவாளர் நாயகம்.

பதிவாளர் நாயகம் திணைக்களம்,
இல. 234/A3, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை,
பத்தரமுல்லை,
*2018, மாச்சு 14.*

**அட்டவணை**

| மாவட்டம் | பிரதேச செயலாளர் பிரிவு | விண்ணப்பம் கோரப்படும் பிரிவும் பதவியும் | விண்ணப்பம் அனுப்பப்பட வேண்டிய முகவரி |
|---|---|---|---|
| பதுளை | வெலிமடை | சில்மியாபுர பிரிவின் பிறப்பு மற்றும் இறப்பு பதிவாளர் பதவி. | மாவட்ட செயலாளர்/ மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்ட செயலகம், பதுளை |
| பதுளை | மஹியங்கனை | மகியங்கனை நகர பிரிவின் பிறப்பு மற்றும் இறப்பு பதிவாளர் பதவி. | மாவட்ட செயலாளர்/ மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்ட செயலகம், பதுளை |

3-1279

---

**பதிவாளர் நாயகம் திணைக்களம்**

பிறப்பு மற்றும் இறப்பு மற்றும் விவாகம்/மேலதிக விவாகம் (கண்டிய/பொது) பதிவாளர் பதவி - கேகாலை மாவட்டம்

இங்கு கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்ட பிரிவில் உள்ள பிறப்பு மற்றும் இறப்பு மற்றும் விவாகம்/மேலதிக விவாகப் பதிவாளர் பதவிக்காக விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. விண்ணப்பதாரர்கள் உரிய பிறப்பு மற்றும் இறப்பு மற்றும் விவாகம்/மேலதிக விவாகப் பிரிவினுள் நிரந்தர வதிவிடதாரியாகவும் மற்றும் போதியளவான ஆதனத்திற்கு உரித்தான பிரதேசவாசிகளின் மதிப்பினைப் பெறுபவராகவும் இருத்தல் வேண்டும்.

2. இப்பதவிக்காக ஆண்/பெண் இருபாலாரும் விண்ணப்பிக்க முடியும்.

6. இதற்காக தேவையான விண்ணப்பங்கள் மற்றும் கிராம பட்டியல்கள்/ கிராம அலுவலர் பிரிவுகள் உள்ளடங்கிய "இணைப்பு 1" உரிய மாவட்டத்தின் மாவட்ட செயலாளர் (அரசாங்க அதிபர்) அலுவலகத்தில் மற்றும் உரிய காணி மற்றும் மாவட்ட பதிவகத்தில் அல்லது பிரதேச செயலகத்தில் பெற்றுக் கொள்ள இயலும்.

7. பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் 2018.05.07 ஆந் திகதி அல்லது அதற்கு முன்பு, அட்டவணையில் குறிப்பிடப்பட்ட முகவரிக்கு கிடைக்குமாறு பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும்.

நீல் த அல்விஸ்,
பதிவாளர் நாயகம்.

பதிவாளர் நாயகம் திணைக்களம்,
இல. 234/A3, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை,
பத்தரமுல்லை,
2018, மாச்சு 14.

**அட்டவணை**

| மாவட்டம் | பிரதேச செயலாளர் பிரிவு | விண்ணப்பம் கோரப்படும் பிரிவும் பதவியும் | விண்ணப்பம் அனுப்பப்பட வேண்டிய முகவரி |
|---|---|---|---|
| நுவரெலியா | ஹங்குரன்கெத்த | கன்னேவ கிழக்குப் பிரிவின் பிறப்பு மற்றும் இறப்பு மற்றும் உடஹேவாஹெட்டப் பிரிவின் விவாக (கண்டிய/பொது) பதிவாளர் பதவி | மாவட்டச் செயலாளர் மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்டச் செயலகம், நுவரெலியா. |
| நுவரெலியா | வலப்பனை | பல்லேகம்பஹா தெற்குப் பிரிவின் பிறப்பு மற்றும் இறப்பு மற்றும் உடஹேவாஹெட்டப் பிரிவின் விவாக (கண்டிய/ பொது) பதிவாளர் பதவி | மாவட்டச் செயலாளர் மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்டச் செயலகம், நுவரெலியா. |
| நுவரெலியா | அம்பகமுவ | ஹட்டன் பிரிவின் பிறப்பு மற்றும் இறப்பு மற்றும் அம்பகமுவ கோறளைப் பிரிவின் விவாக (கண்டிய/பொது) பதிவாளர் பதவி | மாவட்டச் செயலாளர் மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்டச் செயலகம், நுவரெலியா. |

3-1269

---

**பதிவாளர் நாயகம் திணைக்களம்**

பிறப்பு, இறப்பு மற்றும் விவாகம்/மேலதிக விவாகம் (கண்டிய/பொது) பதிவாளர் பதவி - மொணராகலை மாவட்டம்

இங்கு கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்ட பிரிவில் உள்ள பிறப்பு, இறப்பு மற்றும் விவாகம்/மேலதிக விவாகப் பதிவாளர் பதவிக்காக விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. விண்ணப்பதாரர்கள் உரிய பிறப்பு, இறப்பு மற்றும் விவாகம்/ மேலதிக விவாகப் பிரிவினுள் நிரந்தர வதிவிடதாரியாகவும் மற்றும் போதியளவான ஆதனத்திற்கு உரித்தான பிரதேசவாசிகளின் மதிப்பினைப் பெறுபவராகவும் இருத்தல் வேண்டும்.

2. இப்பதவிக்காக ஆண்/பெண் இருபாலாரும் விண்ணப்பிக்க முடியும்.

3. விண்ணப்பதாரரின் வயது, 45 வருடங்களுக்குக் குறையாததாக இருத்தல் வேண்டும் என்பதுடன் 62 வருடங்களுக்கு மேற்படாததாகவும் இருத்தல் வேண்டும்.

4. விவாகப் பதிவாளர் பதவிக்காக விண்ணப்பிப்பவர்கள் திருமணமானவராக இருத்தல் வேண்டும் என்பதுடன் திருமணமாகி 05 வருடங்களுக்கு குறையாததாக இருத்தல் வேண்டும். விதவைகள்/ தபுதாரர் அல்லது விவாகரத்தானவராயிருத்தல் கூடாது.

5. விண்ணப்பம் கோரப்படும் விவாகம்/ பிறப்பு, இறப்பு பதிவு செய்தல் பிரிவிற்கு உட்புகுத்தப்படும் கிராம பட்டியல்கள்/கிராம அலுவலர் பிரிவு, கல்வி மற்றும் ஏனைய தகைமைகள் ஆகிய ஏனைய விபரங்கள் கீழ் குறிப்பிடப்படும். அட்டவணையில் குறிப்பிடப்பட்ட மாவட்டச் செயலகம், பிரதேச செயலகம் அல்லது உரிய காணி மற்றும் மாவட்டச் செயலகம், கிராம அலுவலர் அலுவலகம், சமூர்த்தி அபிவிருத்திச் சங்க அலுவலகம் மற்றும் தபால் அலுவலகம் ஆகிய பிரிவின் பிரசித்தமான இடங்களில் காட்சிப்படுத்தப்பட்டுள்ள அறிவித்தல்களில் பார்த்துக் கொள்ள இயலும்.

6. இதற்காக தேவையான விண்ணப்பங்கள் மற்றும் கிராம பட்டியல்கள்/ கிராம அலுவலர் பிரிவுகள் உள்ளடங்கிய "இணைப்பு 1" உரிய மாவட்டத்தின் மாவட்ட செயலாளர் (அரசாங்க அதிபர்) அலுவலகத்தில் மற்றும் உரிய காணி மற்றும் மாவட்ட பதிவகத்தில் அல்லது பிரதேச செயலகத்தில் பெற்றுக் கொள்ள இயலும்.

7. பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் 2018.05.07 ஆந் திகதி அல்லது அதற்கு முன்பு, அட்டவணையில் குறிப்பிடப்பட்ட முகவரிக்கு கிடைக்குமாறு பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும்.

நீல் த அல்விஸ்,
பதிவாளர் நாயகம்.

பதிவாளர் நாயகம் திணைக்களம்,
இல. 234/A3, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை,
பத்தரமுல்லை,
2018, மாச்சு 14.

**அட்டவணை**

| மாவட்டம் | பிரதேச செயலாளர் பிரிவு | விண்ணப்பம் கோரப்படும் பிரிவும் பதவியும் | விண்ணப்பம் அனுப்பப்பட வேண்டிய முகவரி |
|---|---|---|---|
| மொணராகலை | மொணராகலை | மொணராகலை பிரிவின் பிறப்பு, இறப்பு மற்றும் மொணராகலை பிரிவின் விவாக (கண்டிய /பொது) பதிவாளர் பதவி. | மாவட்ட செயலாளர்/ மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்ட செயலகம், மொணராகலை. |
| மொணராகலை | பிபில | யல்கும்புர பிரிவின் பிறப்பு, இறப்பு மற்றும் பிபில பிரிவின் விவாக (கண்டிய /பொது) பதிவாளர் பதவி. | மாவட்ட செயலாளர்/ மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்ட செயலகம், மொணராகலை. |

3-1275

---

**பதிவாளர் நாயகம் திணைக்களம்**

தமிழ்மொழி மூலம் பிறப்பு, இறப்பு மற்றும் விவாகம்/மேலதிக விவாகப் பதிவாளர் பதவி - யாழ்ப்பாண மாவட்டம்

இங்கு கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்ட பிரிவில் உள்ள பிறப்பு, இறப்பு மற்றும் விவாகம்/மேலதிக விவாகப் பதிவாளர் பதவிக்காக விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. விண்ணப்பதாரர்கள் உரிய பிறப்பு, இறப்பு மற்றும் விவாகம்/ மேலதிக விவாகப் பிரிவினுள் நிரந்தர வதிவிடதாரியாகவும் மற்றும் போதியளவான ஆதனத்திற்கு உரித்தான பிரதேசவாசிகளின் மதிப்பினைப் பெறுபவராகவும் இருத்தல் வேண்டும்.

2. இப்பதவிக்காக ஆண்/பெண் இருபாலாரும் விண்ணப்பிக்க முடியும்.

3. விண்ணப்பதாரரின் வயது, 45 வருடங்களுக்குக் குறையாததாக இருத்தல் வேண்டும் என்பதுடன் 62 வருடங்களுக்கு மேற்படாததாகவும் இருத்தல் வேண்டும்.

4. விவாகப் பதிவாளர் பதவிக்காக விண்ணப்பிப்பவர்கள் திருமணமானவராக இருத்தல் வேண்டும் என்பதுடன் திருமணமாகி 05 வருடங்களுக்கு குறையாததாக இருத்தல் வேண்டும். விதவைகள்/ தபுதாரர் அல்லது விவாகரத்தானவராயிருத்தல் கூடாது.

5. விண்ணப்பம் கோரப்படும் விவாகம்/ பிறப்பு மற்றும் இறப்பு பதிவு செய்தல் பிரிவிற்கு உட்புகுத்தப்படும் கிராம பட்டியல்கள்/ கிராம அலுவலர் பிரிவு, கல்வி மற்றும் ஏனைய தகைமைகள் ஆகிய ஏனைய விபரங்கள் கீழ் குறிப்பிடப்படும் அட்டவணையில் குறிப்பிடப்பட்ட மாவட்டச் செயலகம், பிரதேச செயலகம், அல்லது உரிய காணி மற்றும் மாவட்டச் செயலகம், கிராம அலுவலர் அலுவலகம், சமூர்த்தி அபிவிருத்திச் சங்க அலுவலகம் மற்றும் தபால் அலுவலகம் ஆகிய பிரிவின் பிரசித்தமான இடங்களில் காட்சிப்படுத்தப்பட்டுள்ள அறிவித்தல்களில் பார்த்துக் கொள்ள இயலும்.

6. இதற்காக தேவையான விண்ணப்பங்கள் மற்றும் கிராம பட்டியல்கள்/ கிராம அலுவலர் பிரிவுகள் உள்ளடங்கிய "இணைப்பு 1" உரிய மாவட்டத்தின் மாவட்ட செயலாளர் (அரசாங்க அதிபர்) அலுவலகத்தில் மற்றும் உரிய காணி மற்றும் மாவட்ட பதிவகத்தில் அல்லது பிரதேச செயலகத்தில் பெற்றுக் கொள்ள இயலும்.

7. பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் 2018.05.07 ஆந் திகதி அல்லது அதற்கு முன்பு, அட்டவணையில் குறிப்பிடப்பட்ட முகவரிக்கு கிடைக்குமாறு பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும்.

நீல் த அல்விஸ்,
பதிவாளர் நாயகம்.

பதிவாளர் நாயகம் திணைக்களம்,
இல. 234/A3, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை,
பத்தரமுல்லை,
2018, மாச்சு 14.

**அட்டவணை**

| மாவட்டம் | பிரதேச செயலாளர் பிரிவு | விண்ணப்பம் கோரப்படும் பிரிவும் பதவியும் | விண்ணப்பம் அனுப்பப்பட வேண்டிய முகவரி |
|---|---|---|---|
| யாழ்ப்பாணம் | நெடுந்தீவு | நெடுந்தீவு கிழக்கு பிரிவில் பிறப்பு, இறப்பு மற்றும் நெடுந்தீவு பிரிவில் விவாகப் (பொது) பதிவாளர் பதவி (தமிழ்). | அரசாங்க அதிபர்/ மாவட்டச் செயலாளர்/ மேலதிகப் பதிவாளர் நாயகம், மாவட்ட செயலாளர் அலுவலகம், யாழ்ப்பாணம் |
| யாழ்ப்பாணம் | நெடுந்தீவு | நெடுந்தீவு மேற்கு பிரிவில் பிறப்பு, இறப்பு மற்றும் நெடுந்தீவு பிரிவில் விவாகப் (பொது) பதிவாளர் பதவி (தமிழ்). | அரசாங்க அதிபர்/ மாவட்டச் செயலாளர்/ மேலதிகப் பதிவாளர் நாயகம், மாவட்டச் செயலாளர் அலுவலகம், யாழ்ப்பாணம் |
| யாழ்ப்பாணம் | கரவெட்டி | கரவெட்டி பிரிவில் பிறப்பு, இறப்பு மற்றும் கரவெட்டி பிரிவில் விவாகப் (பொது) பதிவாளர் பதவி (தமிழ்). | அரசாங்க அதிபர்/ மாவட்டச் செயலாளர்/ மேலதிகப் பதிவாளர் நாயகம், மாவட்டச் செயலாளர் அலுவலகம், யாழ்ப்பாணம் |

3-1291

---

# பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும்

**இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்**

இஸ்லாமிய சன்மார்க்க அஹதிய்யா, அல்குர்-ஆன் பாடசாலை இறுதிச் சான்றிதழ் பரீட்சை - 2016 (2018)
(பௌத்த தஹம் பாடசாலை இறுதிச் சான்றிதழ் பரீட்சைக்குச் சமாந்தரமானது)

**01. ஒழுங்கு விதிகளும் பிரமாணங்களும்**

மேற்படிப் பரீட்சை பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் 2018 யூலை மாதத்தில் நடாத்தப்படும். பரீட்சைக்கான பாடங்களும், பாடத்திட்டங்களும் இணைப்பு 01 இல் தரப்பட்டுள்ளன.

**02. பரீட்சை நிலையங்கள்**

இணைப்பு 02 இல் கூறப்பட்டுள்ள நகரங்களில் ஒவ்வொரு மாவட்டத்திலும் தோற்றும் விண்ணப்பதாரிகளின் எண்ணிக்கையைப் பொறுத்து பரீட்சை நிலையங்கள் நிறுவப்படும்.

ஆயினும் ஏதாவதொரு நகரப் பரீட்சை நிலையத்திற்குப் போதிய விண்ணப்பதாரிகள் விண்ணப்பிக்காத போது குறித்த பரீட்சை நிலையம் இரத்துச் செய்யப்பட்டு அந்த நிலையத்திற்குரிய விணிணப்பதாரிகள் அண்மையிலுள்ள வேறொரு நகரப் பரீட்சை நிலையத்தில் பரீட்சைக்குத் தோற்றச் செய்யப்படுவர்.

**03. ஊடக தொழி**

இப்பரீட்சை தமிழ், சிங்களம், ஆங்கிலம் ஆகிய மூன்று மொழிகளிலும் நடாத்தப்படும். எனினும் ஒரு பரீட்சார்த்தி தான் தோற்றும் சகல பாடங்களுக்கும் இவற்றுள் யாதேனும் ஒரு மொழி மூலம் மட்டுமே தோற்ற முடியும்.

**04. தகைமைகள்**

இப்பரீட்சைக்காக விண்ணப்பிக்கும் ஒவ்வொரு பரீட்சார்த்தியும் இதன்கீழ் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளில் ஏதேனுமொன்றைப் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

4.1 முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தில், பதிவு செய்யப்பட்ட அஹதிய்யாப் பாடசாலையொன்றில் 10 ஆம் தரத்தில் கல்வி கற்கும் மாணவர்களாயிருத்தல்.

அல்லது

4.2 முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தில் அங்கீகரிக்கப்பட்ட சிரேஷ்ட தர அல்குர்-ஆன் மத்ரஸா பாடத்திட்டத்தைப் பூர்த்தி செய்த மாணவராயிருத்தல்.

அல்லது

4.3 இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தில் நடாத்தப்படும் க.பொ.த. (சா.த) பரீட்சையில் இஸ்லாம் அல்லது அரபு பாடத்தில் சித்தியடைந்தவர்களாகவிருத்தல்.

**குறிப்பு**

1. இப்பரீட்சைக்குத் தோற்றும் ஒவ்வொரு விண்ணப்பதாரியும் மேலே 4 ஆவது பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளைப் பெற்றுள்ளாரென அஹதிய்யாப் பாடசாலையின் அதிபர் அல்லது சிரேஷ்ட அல்குர்ஆர் மத்ரஸா அதிபர் அல்லது பாடசாலை அதிபரினால் உறுதிப்படுத்தப்படல் வேண்டும்.

2. பரீட்சார்த்தி ஒருவர் இப்பரீட்சைக்குப் பதிவு செய்யப்பட்ட அஹதிய்யாப் பாடசாலை அல்லது சிரேஷ்ட அல்குர்-ஆன் மத்ரஸா அல்லது பாடசாலை அதிபர் மூலமே விண்ணப்பிக்க முடியும்.

05. பதிவு செய்யப்பட்ட சகல அஹதிய்யாப் பாடசாலைகள், சிரேஷ்ட குர்ஆன் மத்ரஸாக்கள் மத்ரஸா பாடசாலைகள் என்பவற்றிற்கு விண்ணப்பப்பத்திரங்களும், அறிவுறுத்தல்களும் தபால் மூலம் அனுப்பி வைக்கப்படும். விண்ணப்பப்பத்திரங்களும், அறிவுறுத்தல்களும் கிடைக்கப்பெறாத நிறுவனங்கள் பரீட்சை ஆணையாளர் நாயகம், ஒழுங்கமைப்பு வெளிநாட்டுப் பரீட்சைகள் கிளை, இலங்கைப் பரீட்சைத் திணைக்களம், பெலவத்தை, பத்தரமுல்லை என்ற முகவரியுடன் தொடர்பு கொண்டு 2018, ஏப்பிறல் மாதம் 12 ஆம் திகதிக்கு முன் விண்ணப்பப்படிவங்களைப் பெற்றுக் கொள்ளல் வேண்டும்.

5.1 விண்ணப்பங்கள் யாவும் இரு பிரதிகளில் தயாரிக்கப்பட்டு, மூலப்பிரதியினைப் பரீட்சைத் திணைக்களத்திற்கு அனுப்புவதோடு, மற்றைய பிரதியினைக் குறிப்பிட்ட நிறுவனத்தில் கோவைப்படுத்தி வைத்திருத்தல் வேண்டும்.

5.2 விண்ணப்பங்கள் யாவும் ஏற்றுக்கொள்ளப்படும் இறுத் திகதி 2018, ஏப்பிறல் மாதம் 23 ஆந் திகதி ஆகும்.

5.3 விண்ணப்பப்படிவங்கள் தெளிவாகவும், பிழைகளின்றியும் பூரணப்படுத்தப்படல் வேண்டும். அவ்வாறு பூர்த்தி செய்யப்படாத விண்ணப்பப்படிவங்களும், இறுதித் தினத்திற்குப் பின்னர் கிடைக்கப்பெறும் விண்ணப்பப்படிவங்களும் நிராகரிக்கப்படும்.

5.4 பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பங்களைப் பதிவுத் தபால் மூலம் பின்வரும் முகவரிக்கு அனுப்பி வைத்தல் வேண்டும்.

பரீட்சை ஆணையாளர் நாயகம்,
ஒழுங்கமைப்பு வெளிநாட்டுப் பரீட்சைகள் கிளை,
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்,
பெலவத்தை,
பத்தரமுல்லை.

5.5 விண்ணப்பங்கள் கிடைத்தமைபற்றி அறிவிக்கப்படமாட்டாது.

5.6 விண்ணப்பங்களை அனுப்பும் கடிதஉறையின் இடதுபக்க மேல் மூலையில்"இஸ்லாமிய சன்மார்க்க அஹதியா இறுதிச்சான்றிதழ் பரீட்சை 2016 (2018)" எனவும், பரீட்சைக்காக விண்ணப்பிக்கும் நகரமும் குறிப்பிடப்படுதல் வேண்டும்.

5.7 விண்ணப்பங்களோடு எவ்வித சான்றிதழையும் இணைத்து அனுப்பக்கூடாது. அஹதிய்யாப் பாடசாலையின் அல்லது சிரேஷ்ட குர்ஆன் மத்ஹாவின் அதிபர் அல்லது பாடசாலை அதிபர் விண்ணப்பதாரி குறித்த தகைமையைப் பெற்றுள்ளார் என்பதை உறுதிப்படுத்தி இருத்தல் வேண்டும்.

**06. பரீட்சைக் கட்டணம் செலுத்தும் முறை**

6.1 இப்பரீட்சைக்கு முதற்தடவை தோற்றும் பரீட்சார்த்திகளிடமிருந்து பரீட்சைக் கட்டணம் அறவிடப்படமாட்டாது. அதன் பின்னர் தோற்றும் பரீட்சார்த்திகளுக்கு கட்டணம் ரூபா 150 ஆகும். நான சித்தியை பூரணப்படுத்துவதற்காக பாடத்திற்கு பரீட்சை கட்டணமாக ரூபா 50 செலுத்துதல் வேண்டும்.

6.2 பரீட்சைக் கட்டணம் செலுத்த வேண்டிய பரீட்சார்த்திகளுக்கான முழுத் தொகையை இலங்கையின் எந்தவொரு அஞ்சலகத்திலும் செலுத்தி பெறப்படும் பற்றுச்சீட்டை விண்ணப்பப்படிவத்துடன் இணைத்து அனுப்புதல் வேண்டும். (பற்றுச்சீட்டின் போட்டோப் பிரதியொன்றினை வைத்திருத்தல் பயனுடையது)

**07. அனுமதி அட்டைகள்**

பரீட்சை அனுமதி அட்டைகள் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் உரிய அஹதிய்யாப் பாடசாலை அதிபர் அல்லது மத்ரஸா அதிபர் அல்லது பாடசாலை அதிபருக்கு விநியோகிக்கப்படும். அதிபரினால் அவ்வனுமதி அட்டைகள் உரிய பரீட்சார்த்திகளுக்கு வழங்கப்பட வேண்டும்.

7.1 ஏதாவதொரு பரீட்சார்த்தி பரீட்சைக்குத் தோற்றும் ஆரம்ப தினத்திலேயே பரீட்சை அனுமதி அட்டையை பரீட்சை மேற்பார்வையாளரிடம் ஒப்படைக்கத் தவறும் பட்சத்தில் அல்லது பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் குறித்தொதுக்கப்பட்ட பரீட்சை நிலையத்திலல்லாது வேறொரு பரீட்சை நிலையத்தில்

பரீட்சைக்குத் தோற்ற எத்தணிக்கும் பட்சத்தில் உரிய பரீட்சார்த்தியின் பரீட்சார்த்தித் தகவு இரத்துச் செய்யப்படும்.

7.2 அனுமதி அட்டையிலுள்ள விண்ணப்பதாரியின் கையொப்பம் அஹதிய்யாப் பாடசாலை அதிபர், குர்ஆன் மத்ரஸா அதிபர், பாடசாலை அதிபர், அரபுக் கல்லூரி அதிபர், வருடமொன்றிற்கு ரூபா 240,360 க்கு மேல் திரட்டிய வருடாந்த சம்பளத்தைப் பெறும் நிரந்தர அரச சேவை உத்தியோகத்தர், மஸ்ஜிதுக்குப் பொறுப்பான இமாம் ஆகியோரில் ஒருவரால் உறுதிப்படுத்தப்பட்டிருக்க வேண்டும்.

7.3 பரீட்சை நடைபெறுவதற்கு (07) ஏழு தினங்களுக்கு முன்னர் அனுமதி அட்டைகள் கிடைக்கப்பெறாத சந்தர்ப்பத்தில், விண்ணப்பங்களைச் சமர்ப்பித்த அஹதிய்யாப் பாடசாலை, குர்ஆன் மத்ரஸா, பாடசாலை என்பவற்றின் அதிபர்கள் இது தொடர்பாகப் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்திற்கு அறிவிக்க வேண்டும். அத்தகைய எல்லாச் சந்தர்ப்பங்களிலும் கீழ்வரும் விடயங்கள் தெரிவிக்கப்படுதல் வேண்டும்.

அ. பரீட்சையின் பெயர் :-
ஆ. அஹதிய்யாப் பாடசாலை/ குர்ஆன் மத்ரஸா/ அரசாங்கப் பாடசாலையின் பெயரும் கணினி இலக்கமும் :-
இ. பரீட்சார்த்தியின் முழுப் பெயரும் விலாசமும் :-
ஈ. பரீட்சைக்கு விண்ணப்பித்த நகரம் :-
உ. விண்ணப்பத்தை சமர்ப்பித்த தபால் நிலையம் :-
ஊ. பதிவு செய்த இலக்கமும் திகதியும் :-

**08. ஆளடையாளத்தை உறுதிப்படுத்தல்**

சகல பரீட்சார்த்திகளும் தாம் பரீட்சைக்குத் தோற்றும் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் பரீட்சை நிலைய மேற்பார்வையாளர் ஏற்றுக்கொள்ளத் தக்கவாறு தமது ஆளடையாளத்தை நிரூபித்தல் வேண்டும். இதற்கென கீழ்க்குறிப்பிடப்பட்ட அடையாள அட்டைகளில் ஒன்று ஏற்றுக்கொள்ளப்படும்.

8.1 ஆட்களைப் பதிவு செய்யும் திணைக்கள ஆணையாளரினால் வழங்கப்படும் தேசிய ஆளடையாள அட்டை;

8.2 செல்லுபடியாகும் வெளிநாட்டுக் கடவுச்சீட்டு;

8.3 அஞ்சல் அடையாள அட்டை.

**09. பரீட்சை முடிவுகளை வெளியிடலும், சித்திபெற்றமையைத் தீர்மானித்தலும்.**

9.1 இப்பரீட்சைக்குரிய பாடங்கள் நான்கு ஆகும். குறித்த நான்கு பாடங்களிலும் சித்தியடையும் பரீட்சார்த்திகள் மட்டும் இப்பரீட்சையில் சித்தியடைந்தவர்களாகக் கருதப்படுவர்.

9.2 ஒரே தடவையில் மூன்று பாடங்களில் சித்தி பெற்று ஒரு பாடத்தில் மட்டும் சித்தி பெறத்தவறுவோர் நூன சித்தி பெற்றவராகக் கருதப்படுவார். அவர்கள் அடுத்துவரும் இரண்டு பரீட்சைத்தவணைகளுக்குள் நூன சித்திப் பாடத்திற்கு மாத்திரம் தோற்றி சித்தி பெற்றால், பரீட்சையில் சித்தி பெற்றவராகக் கணிக்கப்படுவர்.

(இது 2011 ஆம் ஆண்டுக்குரிய பரீட்சை முதல் நடைமுறைப்படுத்தப்படும்.)

9.3 ஒவ்வொரு பாடத்திற்கும் 100 புள்ளிகள் வீதம் வழங்கப்படும். ஒவ்வொரு பாடத்திற்கும் பெறப்படும் புள்ளிகள் கீழ்க் குறிப்பிட்டவாறு தரப்படுத்தப்படும்.

| புள்ளி மட்டம் | தரம் | குறியீடு |
|---|---|---|
| 0 - 34 | சித்தியின்மை | F |
| 35 - 54 | சாதாரண சித்தி | S |
| 55 - 69 | திறமை சித்தி | C |
| 70 - 100 | விசேட சித்தி | D |

9.4 பரீட்சை முடிவுகளை வெளியிடல்

பரீட்சை முடிவுகளைப் பற்றிய விபரங்கள் உரிய நிறுவனங்களது அதிபர்களுக்குத் தபால் மூலம் அனுப்பி வைக்கப்படும்.

**10. சான்றிதழ்**

பரீட்சையில் சித்திபெறும் சகல பரீட்சார்த்திகளுக்கும் சான்றிதழ்கள் வழங்கப்படும்.

**11. விடைத்தாள் மீள்பரிசீலனை**

பரீட்சை முடிவுகள் வெளியாகி 30 நாட்களுக்குள் இத்திணைக்களத்தினால் விநியோகிக்கப்படும் படிவங்கள் மூலம் குறிப்பிட்ட நிறுவனத்தின் அதிபர் விண்ணப்பஞ் செய்தால் விடைத்தாள்களை மீள் பரிசீலனை செய்வதற்கான வாய்ப்பு வழங்கப்படும். எனினும் இதற்கு உரிய கட்டணம் செலுத்தப்படல் வேண்டும். பரீட்சை முடிவுகளில் மாற்றம் ஏற்படும் பட்சத்தில் மாத்திரமே கட்டணம் மீளளிக்கப்படும். எக்காரணம் கொண்டும் விண்ணப்பதாரிக்கோ அல்லது அவரது பிரதிநிதிக்கோ விடைப்பத்திரங்களைப் பார்வையிடுவதற்கு இடமளிக்கப்படமாட்டாது.

12. இங்கு குறிப்பிடப்படும் நிபந்தனைகள், அறிவுறுத்தல்களுக்கமைய நடந்து கொள்வதற்கு எல்லா விண்ணப்பதாரிகளும் கட்டுப்பட்டுள்ளதோடு, இங்கு குறிப்பிடப்படாத ஏதேனும் விடயங்களிருப்பின் அவை பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தின் தற்றுணிவுக்கேற்பத் தீர்மானிக்கப்படும்.

பீ. சனத் பூஜித,
பரீட்சைகள் ஆணையாளர் நாயகம்.

ஒழுங்கமைப்பு வெளிநாட்டுப் பரீட்சைகள் கிளை,
தேசிய மதிப்பீட்டிற்கும் பரீட்சித்தலுக்குமான சேவை,
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்,
பெலவத்தை,
பத்தரமுல்லை.
2018, பெப்புருவரி 22.

**இணைப்பு - 01**

**பரீட்சைக்கான பாடங்களும், பாடத்திட்டமும்**

இப்பரீட்சைக்குரிய ஒவ்வொரு வினாத்தாள்களும் மூன்று மணித்தியாலங்களைக் கொண்ட நான்கு வினாப்பத்திரங்களையுடையதாகும். வினாப்பத்திரங்களின் கட்டமைப்பும், வினாக்களுக்கான புள்ளி ஒதுக்கீடும் 2004.09.10 ஆந் திகதி 1358 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தலுக்கேற்றவாறு அமைந்திருக்கும்.
**முதலாம் வினாப்பத்திரம்**

**1- அகீதாவும், ஷரீஆவும் (இஸ்லாமிய கோட்பாடும் மூலாதாரங்களும் அரபு மொழியும்)**

1.1 **அகீதா பொது விளக்கம்** (அல் இலாஹிய்யத், அந்நுபுவ்வத், அர்ரூஹானிய்யாத், அஸ்ஸம்இய்யாத்)

1.2 **அகீதாவின் பிரிவுகள்**
அஹ்லுஸ்ஸுன்னா வல் ஜமாஅத்தின் அகீதா
ஏனைய அகீதாப் பிரிவுகளிற் சில ஜபரிய்யா, கதரிய்யா, முர்ஜியா, முஃதஜிலா, ஷீஆ

1.3 **தௌஹீதும், ஷிர்க்கும்**
- ஈமானும், குப்றும்
- ரித்தத், நிபாக்
- அல்குர்ஆன் அருளப்பட்டு தொகுக்கப்பட்ட வரலாறு
- சட்ட மூலாதாரம் என்ற வகையில் அல்குர்ஆனின் பயன்பாடு
- ஸுன்னாவின் தோற்றமும் தொகுக்கப்பட்ட வரலாறும்
- சட்ட மூலாதாரம் என்ற வகையில் ஸுன்னாவின் பயன்பாடு
- ஹதீஸ் கலை வரலாறும் பிரதான முஹத்திஸ்களின் பங்களிப்புகளும்
- இஜ்திஹாத் பற்றிய விளக்கம்
- துணை மூலாதாரம் என்ற வகையில் இஜ்மா
- துணை மூலாதாரம் என்ற வகையில் கியாஸ்
- பிக்ஹுடைய வரலாறும் பிரதான இமாம்களும்

1.4 **அறபு மொழி**

- உறுப்பமைய எழுதுதல்
- சிறு வாக்கியங்களை எழுதுதல்
- இஸ்லாம் பாடத்துடன் தொடர்புடைய அறபுச் சொற்களை எழுதுதல்
- முக்கியமான ஸூறாக்களையும், ஆயத்துக்களையும், ஹதீஸ்களையும் பிழையின்றி எழுதுதல்

**இரண்டாம் வினாப்பத்திரம்**

2 **அல்பிக்ஹுல் இஸ்லாமி**
**(இஸ்லாமிய சட்டநெறி)**

2.1 **இபாதத் பற்றிய விளக்கம்**

- இபாதத்தின் பிரிவுகள்
- தஹாரத்

2.2 **நஜீஸும் அதன் வகைகளும்**

- நஜீஸை சுத்தப்படுத்தும் முறை
- நீரும் அதன் வகைகளும்
- வுழு, தயம்மும், குளிப்பு பற்றிய நடைமுறை ஒழுங்குகள்

2.3 **ஸகாத்**
- முக்கியத்துவம்
- விதி முறைகள்
- திரட்டலும் விநியோகமும்
- ஸகாத் மூலம் வறுமைத் தணிப்பும் செல்வப் பங்கீடும்

2.4 **நோன்பு**

- முக்கியத்துவம்
- விதிமுறைகளும் பயனும்

2.5 **ஹஜ்**

- முக்கியத்துவம்
- விதிமுறைகளும் பயனும்

2.6 **ஹஜ் : நிறைவேற்றும் முறை**

- பர்ளுகள், வாஜிபுகள், சுன்னத்துகள்
- பர்ளான ஹஜ்ஜுக்கு மேலதிகமாக செய்யும் ஹஜ்கள்

2.7 **இஸ்லாத்தில் உணவு, உடை, இறையுள் பற்றிய கண்ணோட்டமும் நடைமுறைகளும்**

2.8 **ஜிஹாத் பற்றிய விளக்கம்**

2.9 **குர்பானிகளும் அறுப்பு முறைகளும்**

2.10 **சத்தியம் செய்தலும் நேர்ச்சையும்**

2.11 **முஆமலாத் பற்றிய விளக்கம்**

- உழைப்பின் முக்கியத்துவம்
- பிரதான கொடுக்கல் வாங்கல் (வியாபாரம்)
- ஏனைய கொடுக்கல் வாங்கல் (இ-ம்: இரவல், வாடகை)
- வக்பு, வஸிய்யத், வராஸத் (பொதுச்சொத்து, உயில் சொத்து, வாரிசுச்சொத்து)

2.12 **இஸ்லாத்தில் ஆண், பெண் நிலை**

- நிகாஹின் விதிமுறைகளும் பயனும்
- குடும்ப வாழ்வு
- கணவன் - மனைவி
- பெற்றோர் - பிள்ளை உரிமைகளும், கடமைகளும்
- தலாக்கும் இத்தாவும்

2.13 **ஜினாயத்**

- ஹுதூத், கிஸாஸ், தஃஸீர்

**மூன்றாவது வினாப்பத்திரம்**

*3 -* **ஸீறாவும் தாரீகும்**

*3.1* **இஸ்லாத்துக்கு முந்திய அரபு நாட்டின் சமய சமூக நிலை**

*3.1.1* **நபி(ஸல்) அவர்கள்**

- நுபுவத்திற்கு முந்திய வாழ்க்கை
  - * குடும்பம், பரம்பரை
  - * இளமைப்பருவம்
  - * நற்குணம்
  - * திருமணம்
- நுபுவ்வத்துக்கும் ஹிஜ்ரத்திற்கும் இடையிலான வாழ்க்கை
  - * நுபுவ்வத் கிடைத்தல்
  - * இஸ்லாமிய பிரச்சாரங்களும் விளைவுகளும்
  - * மிஃராஜ்
  - * ஹிஜ்ரத்
- மதீனா வாழ்கை
  - * சமூக அரசியல் செயற்பாடு
  - * தற்காப்பு யுத்தங்களும், சமாதான உடன்படிக்கைகளும்
  - * இஸ்லாம் பூரணத்துவம் பெறல்
- ஸஹாபாக்களின் அந்தஸ்தும் இஸ்லாத்திற்கான அவர்களது பங்களிப்பும்
- குலபாஉர்ராஷிதூன்கள் வரலாறும், அரசியல் பங்களிப்பும்
- உமையா, அப்பாசிய ஆட்சிக்காலம்
- பைத்துல் முகத்தஸ். - வரலாறு
- இலங்கை முஸ்லிம்களின் வரலாறும் பங்களிப்பும்
- முஸ்லிம்களின் அறிவியல் பங்களிப்பு
- பின்வருவோர் பற்றிய வரலாறு

  - * இமாம் புகாரி (ரஹ்)
  - * இமாம் ஷாபிஈ (ரஹ்)
  - * இமாம் கஸ்ஸாலி (ரஹ்)
  - * இமாம் அப்துல் காதிர் ஜீலானி (ரஹ்)
  - * இமாம் ஷாதுலி (ரஹ்)

**நான்காம் வினாத்தாள்**

*4 -* **அஹ்லாக் - (இஸ்லாமிய ஒழுக்கவியல்)**

*4.1* **அஹ்லாக் பற்றிய இஸ்லாத்தின் கண்ணோட்டம்**

- அஹ்லாக் பற்றிய விளக்கம்
- ஈமானுக்கும் அஹ்லாக்குக்கும் இடையிலான தொடர்பு
- அஹ்லாக்குக்கும் இபாதத்திற்கும் இடையிலான தொடர்பு
- உளத்தூய்மை (இஃலாஸ்)

*4.2* **தக்வா**

- வரஉ, ஸுஹ்த்
- முராகபா, முஹாஸபா
- ஷவ்க் (இறையன்பு)

*4.3* **ஈகை**

- தியாகம்
- நன்றியுணர்வு
- பொறுமை - சகிப்புத்தன்மை - விட்டுக்கொடுத்தல் - மன்னித்தல்
- பணிவு
- நேரம் பேணுதல்
- அவையவங்களைப் பேணுதல் நாவு, கண், காது, பாலுறுப்பு
- பிறரை மதித்தல்
- நீதியும் நேர்மையும்
- இளைஞர் - யுவதிகளிடம் காணப்பட வேண்டிய சிறப்பான ஒழுக்கப்பண்புகள்
- ஏனைய சமயத்தவர்களுடன் இணங்கி வாழ்தல்

*4.4* **இஸ்லாமிய நீதிமுறை**

**இணைப்பு - 02**

குறித்த மாவட்டங்களில் பரீட்சை நிலையங்கள் ஏற்படுத்தப்படவுள்ள நகரங்களும் நகர இலக்கங்களும்.

| நகரம் | நகர இல. | மாவட்ட இல. | நகரம் | நகர இல. | மாவட்ட இல. |
|---|---|---|---|---|---|
| **கொழும்பு மாவட்டம்** | | **01** | **கம்பஹா மாவட்டம்** | | **02** |
| கொழும்பு (மத்தி) | 01 | | திஹாரிய | 03 | |
| பம்பலப்பிட்டி | 02 | | மாபோலை | 04 | |
| | | | மல்வானை | 05 | |
| | | | நீர்கொழும்பு | 06 | |
| | | | கல்எலிய | 07 | |
| **களுத்துறை மாவட்டம்** | | **03** | **காலி மாவட்டம்** | | **04** |
| பாணந்துறை | 08 | | காலி | 11 | |
| களுத்துறை | 09 | | | | |
| அளுத்கமை | 10 | | | | |
| **மாத்தறை மாவட்டம்** | | **05** | **ஹம்பாந்தோட்டை மாவட்டம்** | | **06** |
| வெலிகமை | 12 | | ஹம்பாந்தோட்டை | 14 | |
| மாத்தறை | 13 | | | | |
| **கேகாலை மாவட்டம்** | | **07** | **குருநாகல் மாவட்டம்** | | **08** |
| மாவனல்லை | 15 | | குளியாப்பிட்டி | 18 | |
| வரக்காபொலை | 16 | | குருநாகல் | 19 | |
| கன்னத்தோட்டை | 17 | | மெல்சிரிபுர | 20 | |
| | | | பொல்கஹவெல | 21 | |
| | | | கெகுனாகொல்ல | 22 | |
| **புத்தளம் மாவட்டம்** | | **09** | **அநுராதபுர மாவட்டம்** | | **10** |
| நுரைச்சோலை | 23 | | அநுராதபுரம் | 26 | |
| புத்தளம் | 24 | | கெக்கிராவை | 27 | |
| சீலாபம் | 25 | | கலென்பிந்துனுவெவ | 28 | |
| **பொலன்னறுவை மாவட்டம்** | | **11** | **மாத்தளை மாவட்டம்** | | **12** |
| | 29 | | மாத்தளை | 30 | |
| கதுறுவெல | | | | | |
| **கண்டி மாவட்டம்** | | **13** | **நுவரெலியா மாவட்டம்** | | **14** |
| கண்டி | 31 | | நுவரெலியா | 35 | |
| நாவலப்பிட்டி | 32 | | | | |
| தெல்தோட்டை | 33 | | | | |
| கெலி ஒயா | 34 | | | | |
| **இரத்தினபுரி மாவட்டம்** | | **15** | **பதுளை மாவட்டம்** | | **16** |
| எஹலியகொடை | 36 | | பதுளை | 38 | |
| பலாங்கொடை | 37 | | வெலிமடை | 39 | |
| **மொனறாகலை மாவட்டம்** | | **17** | **அம்பாறை மாவட்டம்** | | **18** |
| பிபிலை | 40 | | அக்கரைப்பற்று | 41 | |
| | | | பொத்துவில் | 42 | |
| | | | கல்முனை | 43 | |
| | | | சம்மாந்துறை | 44 | |
| | | | இறக்காமம் | 45 | |
| | | | நிந்தவூர் | 46 | |
| | | | ஒலுவில் | 47 | |
| **மட்டக்களப்பு மாவட்டம்** | | **19** | **திருகோணமலை மாவட்டம்** | | **20** |
| காத்தான்குடி | 48 | | மூதூர் | 51 | |
| ஏறாவூர் | 49 | | கிண்ணியா | 52 | |
| வாழைச்சேனை | 50 | | திருகோணமலை | 53 | |
| **வவுனியா மாவட்டம்** | | **21** | **மன்னார் மாவட்டம்** | | **22** |
| வவுனியா | 54 | | மன்னார் | 55 | |
| **முல்லைத்தீவு மாவட்டம்** | | **23** | **கிளிநொச்சி மாவட்டம்** | | **24** |
| முலைலைத்தீவு | 56 | | கிளிநொச்சி | 57 | |
| **யாழ்ப்பாண மாவட்டம்** | | **25** | | | |
| யாழ்ப்பாணம் | 58 | | | | |

03 - 969

# பகுதி I : தொகுதி (IIஆ) - விளம்பரங்கள்

## கேள்விப்பத்திர அறிவித்தல்கள்

**மேல் நீதிமன்றம் - திருகோணமலை**

அரசுடமையாக்கப்பட்ட மற்றும் உரிமை கோரப்படாத மோட்டார் சைக்கிள்கள் கேள்வி கோரல் மூலம் விற்பனை

திருகோணமலை மேல் நீதிமன்ற வலயத்திற்குட்பட்ட மூதூர் மாவட்ட/ நீதிவான் நீதிமன்றினால் அரசுடமையாக்கப்பட்ட மற்றும் உரிமை கோரப்படாத கீழ்க்காணும் விபரங்களையுடைய மோட்டார் சைக்கிள்களை கேள்வி கோரல் மூலம் விற்பனை செய்ய திருகோணமலை மேல் நீதிமன்ற கேள்விச் சபை தீர்மானித்துள்ளது.

விற்பனைக்கான மேற்படி மோட்டார் சைக்கிள்களை 2018.03.26 ஆம் திகதியிலிருந்து மூதூர் மாவட்ட/ நீதிவான் நீதிமன்றின் அலுவலக நேரத்தில் பதிவாளரின் அனுமதியுடன் பார்வையிடலாம். மேலும் கேள்விப்பத்திரங்களையும் கேள்விக்கான நிபந்தனை களையும் திருகோணமலை மேல் நீதிமன்றப் பதிவாளரிடம் 2018.03.26 ஆந் திகதியிலிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

2018.04.20 ஆந் திகதியன்று கேள்விக்கோரல் முடிவுறுத்தப்பட்டு 2018.04.23 ஆந் திகதியன்று பி.ப. 2.00 மணிக்கு கேள்விப்˙பத்திரங்கள் திறக்கப்படும். மேற்படி கேள்விகோரல் சம்பந்தமாக மீளச் செலுத்தப்படாத கட்டணமாக ரூபா

100 செலுத்தப்பட வேண்டும் என்பதுடன் மீளச் செலுத்தப்படும் கட்டணமும் செலுத்தப்பட வேண்டும் .

திருகோணமலை மேல் நீதிமன்ற அலுவலகத்தில் பெறப்படும் விண்ணப்பப்பத்திரம் தவிர்ந்த ஏனைய விண்ணப்பப்படிவங் களோ போட்டோப் பிரதிகளோ நிராகரிக்கப்படும்.

**மோட்டார் சைக்கிள்களின் விபரம்**

| தொ. இல. | வழக்கு இல. | வாகனப் பதிவுஇல. மற்றும் விபரம் | மீளச் செலுத் தப்படக் கூடிய வைப்பு |
|---|---|---|---|
| 1. | எம்.சி. 22706/12 | மோட்டார் சைக்கிள் WU-1797 | ரூ. 1,000 |
| 2. | எம்.சி. 30747/15 | மோட்டார் சைக்கிள் AAM-1265 | ரூ. 5,000 |
| 3. | எம்.சி. 29121/14 | மோட்டார் சைக்கிள் YD-7822 | ரூ. 2,000 |
| 4. | எம்.சி. 26778/13 | மோட்டார் சைக்கிள் AAD-9607 | ரூ. 2,000 |
| 5. | எம்.சி. 34329/16 | மோட்டார் சைக்கிள் BDC-5228 | ரூ. 2,000 |

அன்னலிங்கம் பிரேமசங்கர்,
கிழக்கு மாகாண மேல் நீதிமன்ற நீதிபதி,
தலைவர்.

திருகோணமலை மேல்நீதிமன்ற கேள்விச் சபை,
திருகோணமலை,
2018.02.19.

3- 761

---

**மேல் நீதிமன்றம் - திருகோணமலை**

அரசுடமையாக்கப்பட்ட மற்றும் உரிமை கோரப்படாத மோட்டார் சைக்கிள்கள் கேள்வி கோரல் மூலம் விற்பனை

திருகோணமலை மேல் நீதிமன்ற வலயத்திற்குட்பட்ட திருகோணமலை நீதிவான் நீதிமன்றினால் அரசுடமையாக்கப்பட்ட மற்றும் உரிமை கோரப்படாத கீழ்க்காணும் விபரங்களையுடைய மோட்டார் சைக்கிள்களை கேள்வி கோரல் மூலம் விற்பனை செய்ய திருகோணமலை மேல் நீதிமன்ற கேள்விச் சபை தீர்மானித்துள்ளது.

விற்பனைக்கான மேற்படி மோட்டார் சைக்கிள்களை 2018.03.26ஆம் திகதியிலிருந்து திருகோணமலை நீதிவான் நீதிமன்றின் அலுவலக நேரத்தில் பதிவாளரின் அனுமதியுடன் பார்வையிடலாம்.மேலும் கேள்விப்பத்திரங்களையும் கேள்விக்கான நிபந்தனைகளையும் திருகோணமலை மேல் நீதிமன்றப் பதிவாளரிடம் 2018.03.26 ஆந் திகதியிலிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

2018.04.20 ஆந் திகதியன்று கேள்விக்கோரல் முடிவுறுத்தப்பட்டு 2018.04.23 ஆந் திகதியன்று பி.ப. 2.00 மணிக்கு கேள்விப்பத்திரங்கள் திறக்கப்படும். மேற்படி கேள்விகோரல் சம்பந்தமாக மீளச் செலுத்தப்படாத கட்டணமாக ரூபா 100 செலுத்தப்பட வேண்டும் என்பதுடன் மீளச் செலுத்தப்படும் கட்டணமும் செலுத்தப்பட வேண்டும்

திருகோணமலை மேல் நீதிமன்ற அலுவலகத்தில் பெறப்படும் விண்ணப்பப்பத்திரம் தவிர்ந்த ஏனைய விண்ணப்பப்படிவங் களோ போட்டோப் பிரதிகளோ நிராகரிக்கப்படும்.

**மோட்டார் சைக்கிள்களின் விபரம்**

| தொ. இல. | வழக்கு இல. | வாகனப் பதிவுஇல. மற்றும் விபரம் | மீளச் செலுத் தப்படக் கூடிய வைப்பு |
|---|---|---|---|
| 1. | எம்.சி. 4391/15 | மோட்டார் சைக்கிள் WP-BCL- 3528 | ரூ. 2,000 |
| 2. | எம்.சி. 5696/16 | மோட்டார் சைக்கிள் EP-AAT-7013 | ரூ. 5,000 |
| 3. | எம்.சி. 2540/15 | மோட்டார் சைக்கிள் EP- AAS-5709 | ரூ. 5,000 |

அன்னலிங்கம் பிரேமசங்கர்,
கிழக்கு மாகாண மேல் நீதிமன்ற நீதிபதி,
தலைவர்.

திருகோணமலை மேல்நீதிமன்ற கேள்விச் சபை,
திருகோணமலை,
2018.02.19.

3- 762

**மேல் நீதிமன்றம் - திருகோணமலை**

அரசுடமையாக்கப்பட்ட மற்றும் உரிமை கோரப்படாத மோட்டார் சைக்கிள்கள் கேள்வி கோரல் மூலம் விற்பனை

திருகோணமலை மேல் நீதிமன்ற வலயத்திற்குட்பட்ட கந்தளாய் மாவட்ட/ நீதிவான் நீதிமன்றினால் அரசுடமையாக்கப்பட்ட மற்றும் உரிமை கோரப்படாத கீழ்க்காணும் விபரங்களையுடைய மோட்டார் சைக்கிள்களை கேள்வி கோரல் மூலம் விற்பனை செய்ய திருகோணமலை மேல் நீதிமன்ற கேள்விச் சபை தீர்மானித்துள்ளது.

விற்பனைக்கான மேற்படி மோட்டார் சைக்கிள்களை 2018.03.26ஆம் திகதியிலிருந்து கந்தளாய் மாவட்ட/ நீதிவான் நீதிமன்றின் அலுவலக நேரத்தில் பதிவாளரின் அனுமதியுடன் பார்வையிடலாம்` . மேலும் கேள்விப்பத்திரங்களையும் கேள்விக்கான நிபந்தனைகளையும் திருகோணமலை மேல் நீதிமன்றப் பதிவாளரிடம் 2018.03.26 ஆந் திகதியிலிருந்து பெற்றுக் கொள்ளலாம்.

2018.04.20 ஆந் திகதியன்று கேள்விக்கோரல் முடிவுறுத்தப்பட்டு 2018.04.23 ஆந் திகதியன்று பி.ப. 2.00 மணிக்கு கேள்விப் பத்திரங்கள் திறக்கப்படும். மேற்படி கேள்வி கோரல் சம்பந்தமாக மீளச் செலுத்தப்படாத கட்டணமாக ரூபா 100 செலுத்தப்பட வேண்டும் என்பதுடன் மீளச் செலுத்தப்படும் கட்டணமும் செலுத்தப்பட வேண்டும்.

திருகோணமலை மேல் நீதிமன்ற அலுவலகத்தில் பெறப்படும் விண்ணப்பப்பத்திரம் தவிர்ந்த ஏனைய விண்ணப்பப் படிவங்களோ போட்டோப் பிரதிகளோ நிராகரிக்கப்படும்.

**மோட்டார் சைக்கிள்களின் விபரம்**

| தொ. இல. | வழக்கு இல. | வாகனப் பதிவுஇல. மற்றும் விபரம் | மீளச் செலுத் தப்படக் கூடிய வைப்பு |
|---|---|---|---|
| 1. | எம்.சி .52902 | மோட்டார் சைக்கிள் EP-TW- 0935 | ரூ. 2,000 |
| 2. | எம்.சி. 52021 (BR/275/16) | மோட்டார் சைக்கிள் EP-SN-4485 | ரூ. 2,000 |

அன்னலிங்கம் பிரேமசங்கர்,
கிழக்கு மாகாண மேல் நீதிமன்ற நீதிபதி,
தலைவர்.

திருகோணமலை மேல்நீதிமன்ற கேள்விச் சபை,
திருகோணமலை,
2018.02.19.
3- 763

---

**இலங்கைப் புகையிரத சேவைகள்**
**பெறுகை அறிவித்தல்**
**(இலங்கைப் புகையிரத சேவைக்கு 5000 எண்ணிக்கையான EN4 5E1 (45 அடி) தண்டவாளங்களின் பெறுகை**

பெறுகை இல. SRS/ F.17536

1. இலங்கைப் புகையிரத சேவைக்கு 5000 எண்ணிக்கையான EN 45 E1 - 45 அடி ( 13.716m) தண்டவாளங்களை வழங்குவதற்காக முத்திரைக்குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்கள் இலங்கை, கொழும்பு, த.பெ.இல. 355, இலங்கைப் புகையிரத சேவைகள் தலைமையகம், இலங்கைப் புகையிரத சேவைகள் சார்பாக அமைச்சரவையினால் நியமிக்கப்பட்ட நிலையான பெறுகைக் குழுத் தலைவர் பெற்றுக்கொள்வார். அற்றோணித்தத்துவத்தின் மூலம் அதிகாரம் வழங்கப்பட்ட தர அங்கீகாரம் பெற்ற முகவர் ஊடாக விலைமனுதாரர்கள் தமது விலைமனுக்களைச் சமர்ப்பிக்கலாம்.

2. சர்வதேச போட்டி ரீதியிலான விலைமனுக் கோரல் மூலம் விலைமனுச் செயற்பாடானது நடாத்தப்படும்.

3. கீழே வழங்கப்பட்டுள்ள முகவரியிலிருந்து மு.ப. 9.00 மணியிலிருந்து பி.ப.3.00 மணிவரை ஆர்வமுள்ள தகுதி வாய்ந்த விலைமனுதாரர்கள் மேலதிக தகவல்களைப் பெற்றுக்கொள்ள முடிவதுடன் விலைமனு ஆவணங்களைப் பரீட்சித்துப் பார்க்கலாம்.

புகையிரத களஞ்சிய சாலைகள் அத்தியட்சகர்,
புகையிரத களஞ்சியசாலைத் திணைக்களம்,
ஒல்கொட் மாவத்தை, கொழும்பு 10., இலங்கை.
தொலைபேசி இலக்கங்கள் : 94 (11) 2438078 அல்லது 94 (11) 2436818
தொலை நகல் இலக்கம் : 94(11) 2432044
மின்னஞ்சல் : srs. slr @ gmail. com
இணையத்தளம் : www.railway.gov.lk

4. தகைமைகளின் தேவைப்பாடுகள் பின்வருமாறு.-

அ. இவ் ஒப்பந்தத்தின் கீழாக வழங்கப்படவுள்ள பொருட்கள், இவ் விலைமனுவுடன் வழங்கப்படும் இலங்கைப் புகையிரத களஞ்சியத்தின் RSS No. 557(A) விபரக் குறிப்புக்கமைவானது என்பதை உறுதி செய்தல்வேண்டும்.

ஆ. வழங்கப்படவுள்ள உருப்படிகள் ஒவ்வொன்றிற்குமான வடிவமைப்பு மற்றும் உற்பத்திக்கான ISO 9001:2008 பிரதிகள், கேள்வியுடன் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

இ. விலைமனுதாரர்களுக்கான தகுதிகள்.-

(1) சகல விலைமனுதாரர்களும் இந்த ஒப்பந்தத்தின் கீழ் பொருட்களை வழங்குவதற்கு சட்டபூர்வமான உரிமையைக் கொண்டிருத்தல் வேண்டும்.

(2) விலைமனுதாரருக்குமுரண்பட்ட அக்கறைகள் இருத்தலாகாது. முரண்பட்ட அக்கறைகள் இருக்குமென தெரியவருமிடத்து அனைத்து விலைமனுதாரர்களும் தகுதியீனத் துக்குட்படுத்தப்படுவர். அதனால் விலைக்கோரல் செயற்பாடுகளின் போது இது தொடர்பில் பின்வரும் விடயங்களுக்கிடையிலான முரண்பாடுகள் கவனத்திற் கொள்ளப்படும்.

(அ) விலைமனுதாரர் கொள்வனவு செய்வதற்காக பயன்படுத்தப்படும் வடிவமைப்பு மற்றும் விபரக்குறிப்புகள் மற்றும் பிற ஆவணங்களைத் தயாரிப்பதற்கான ஆலோசனை சேவைகள் வழங்கும் விடயத்தில் கொள்வனவாளர் ஈடுபட்டிருந்த நிறுவனம் அல்லது அதன் துணை நிறுவனங்களுடன் கடந்த காலத்தில் தொடர்புபட்டிருந்தால் அல்லது தற்போது இருப்பாரானால் இந்த விலைமனு ஆவணங்களின் கீழ் வாங்கவேண்டும் அல்லது,

(ஆ) இந்த விலைக்கோரல் செயற்பாடுகளினுள் ஒன்றுக்கு மேற்பட்ட எண்ணிக்கையான விலைக்கோரல்கள் சமர்ப்பிக்கலாம். எவ்வாறாயினும் இது துணை ஒப்பந்தக்காரர்களின் பங்கேற்பை ஒன்றுக்கு மேற்பட்ட முயற்சிகளில் குறைக்காது.

(3) விலைமனுதாரரின் பெயர் ஒப்பந்தத்தைக் கையேற்கும் நாளில் அல்லது விலைமனுக்களைச் சமர்ப்பிக்கும் நாளில் தேசிய கொள்வனவு முகவரமைப்பின் ( NPA) அபகீர்த்தியாளர் பட்டியலில் இடம்பெற்றிருந்தால் அவர் தகுதியீனத்திற்குட்படுவார். அவ்வாறு தடை செய்யப்பட்ட நிறுவனங்களின் பெயர்ப்பட்டியல் தேசிய கொள்வனவு முகவரமைப்பின் இணையத்தளத்தில் கிடைக்கத்தக்கதாகவுள்ளன www. npa. lk

5. அ. 1987 ஆம் ஆண்டின் 03 ஆம் இலக்க பொது ஒப்பந்தச் சட்டத்தினால் வேண்டப்படும் வகையில் ஒரு முகவராக அல்லது உப முகவராக பிரதிநிதியாக அல்லது எந்தவொரு விலைமனுதாரர்க்கு அல்லது அவர் சார்பாக, விலைமனுக்களைச் சமர்ப்பிப்பதற்கு முன்னர் இலங்கைப் பொது ஒப்பந்தங்கள் பதிப்பாளருடன் தம்மைப் பதிவு செய்தல் வேண்டும். விலைமனுவுடன் பதிவுச் சான்றிதழின் மூலப் பிரதி சமர்ப்பிக்கப்படல் வேண்டும். அவ்வாறான மூலப்பிரதி சான்றிதழைச் சமர்ப்பிக்கத்தவறும் விலைமனுதாரர்களின் விலைமனுக்கள் நிராகரிக்கப்படும்.

ஆ. 187 ஆம் ஆண்டின் 09 ஆம் இலக்க பொது ஒப்பந்தச் சட்டத்திற்கமைவாக, பெறுகை கையளிக்கப்பட முன்னர் மற்றும் விலைமனுக்களைச் சமர்ப்பித்ததன் பின்னர் உடனடியாக விலைமனுதாரர்கள் தம்மைப் பதிவுசெய்து கொள்ளல் வேண்டும். பொது ஒப்பந்தச் சட்டத்திற்கமைவாக பதிவுச் சான்றிதழை உரித்தான பெறுகைக் குழுவிற்கு சமர்ப்பிக்காத எந்தவொரு விலைமனுதாரர்க்கும் பெறுகை கையளிக்கப்பட மாட்டாது.

6. இலங்கை, கொழும்பு 10, ஒல்கொட் மாவத்தை, புகையிரத களஞ்சியசாலைகள் அத்தியட்சகரின் அலுவலக முகவரிக்கு அல்லது வெளிநாடுகளிலுள்ள இலங்கை தூதுவராலயங்களுக்கு எழுத்துருவிலான விண்ணப்பம் ஒன்றைச் சமர்ப்பிப்பதன் பேரில் மீளளிக்கப்படாத பெறுகைகள் கட்டணமாக 60,000 ரூபா அல்லது அதற்குச் சமமான தொகையொன்றை இலகுவாக மாற்றப்படக்கூடிய நாணயத்தில் 2018.03.06 ஆந் திகதி முதல் 2018.04.20 ஆந் திகதி வரையான காலத்தில் பி.ப. 3.00 மணி ( இலங்கை நேரம்) வரை செலுத்துவதன் பேரில் ஆர்வமுள்ள விலைமனுக்களைச் சமர்ப்பித்தர்கள் ஆங்கில மொழியிலான முழுமையான விலைமனு ஆவணத் தொகுதியொன்றை கொள்வனவு செய்யலாம்.

விலைமனுக்களை 2018.04.23 அன்று பிற்பகல் 2.00 மணி அல்லது அதற்கு முன்னர் அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.

தலைவர்,
அமைச்சரவையினால் நியமிக்கப்பட்ட
நிலையான பெறுகைக் குழு,
போக்குவரத்து மற்றும் சிவில் போக்குவரத்து அமைச்சு,
7 ஆம் மாடி, செத்சிறிபாய, 2 ஆம் படிநிலை,
பத்தரமுல்லை, இலங்கை.

தாமதமாகும் விலைமனுக்கள் நிராகரக்கப்படும். இலங்கை பத்தரமுல்லை, செத்சிறிபாய, 2 ஆம் படிநிலை, 7 ஆம் மாடி, போக்குவரத்து மற்றும் சிவில் விமானப் போக்குவரத்து அமைச்சு சபை அறையில் 2018.04.23 ஆந் திகதியன்று பி.ப. 2.00 மணிக்கு விலைமனுதாரர்களின் பிரதிநிதிகள் முன்னிலையில் விலைமனுக்கள் திறக்கப்படும்.

தலைவர்,
அமைச்சரவையினால் நியமிக்கப்பட்ட
நிலையான பெறுகைக் குழு,
போக்குவரத்து மற்றும் சிவில் விமானப்
போக்குவரத்து அமைச்சு.

குறியீட்டு இல. SRS/F. 7536

3- 857

---

# உத்தியோகத் தொடர்பற்ற அறிவித்தல்கள்

**அறிவித்தல்**

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9 ஆம் பிரிவின் கீழ், பின்வரும் கம்பனி கூட்டிணைக்கப்பட்டுள்ளதென அறிவிக்கப்படுகின்றது.-

கம்பனியின் பெயர் : நெநோ பொக்ஷி ( பிறைவெட் ) லிமிட்டட்
பதிவிலக்கம் : பீவீ 129477
பதிவு முகவரி : 20/10, கணகரத்ண வீதி, லக்ஷபத்திய, மொரட்டுவை
கூட்டிணைக்கப்பட்ட திகதி: 2017.02.02.

பணிப்பாளர்.

3-747

**கம்பனியொன்றைக் கூட்டிணைத்தல் தொடர்பான பகிரங்க அறிவித்தல்**

2018, பெப்புருவரி 19 ஆம் திகதி கீழ்க் குறிப்பிடப்படுகின்ற கம்பனி 2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1) ஆம் பிரிவின் நியதிகளின் கீழ், கூட்டிணைப்புச் செய்யப்பட்டது என இத்தால் அறிவித்தல் விடுக்கப்படுகின்றது.-

கம்பனியின் பெயர் : கென்கன் லங்கா ( பிறைவெட் ) லிமிட்டட்
பதிவிலக்கம் : பீவீ 129909
கூட்டிணைக்கப்பட்ட திகதி: 2018, பெப்புருவரி 19
பதிவு செய்த அலுவலகம்: இல. 8/1, அரலிய மாவத்தை, சிரிமல் உயன

பணிப்பாளர்கள்.

3- 758

**கம்பனி கூட்டிணைக்கப்பட்டது பற்றிய பொது அறிவித்தல்**

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1) ஆம் பிரிவிற்கேற்ப அறிவித்தல் இத்தால் தரப்படுகின்றது.-

கம்பனியின் பெயர் : சிலா ஓ அட்வென்ச்சர்ஸ் (பிறைவேட்) லிமிட்டட்
கம்பனி பதிவு இல. : பீவீ 127066
கூட்டிணைக்கப்பட்ட திகதி : 2017, நவெம்பர் 08 ஆந் திகதி

பதிவு செய்யப்பட்ட முகவரி : இல. 9, 1 ஆவது மாடி, ஸ்கூல் ஒழுங்கை, கொழும்பு 3

குறுாப் மனேஜ்மென்ட் & செகரெட்டேரியல் சேர்விசஸ் (பிறைவேட்) லிமிட்டட்
கம்பனிச் செயலாளர்கள்.

இல. 141/3, வொக்ஷோல் வீதி, கொழும்பு 2.

3- 808

---

### கம்பனி கூட்டிணைக்கப்பட்டது பற்றிய பொது அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1) ஆம் பிரிவிற்கேற்ப அறிவித்தல் இத்தால் தரப்படுகின்றது.-

கம்பனியின் பெயர் : சுப்ரிம் இனோவேஷன் (பிறைவேட்) லிமிட்டட்
கம்பனி பதிவு இல. : பீவீ 126209
கூட்டிணைக்கப்பட்ட திகதி : 2017, ஒற்றோபர் 09 ஆந் திகதி
பதிவு செய்யப்பட்ட முகவரி : லெவல் 33, வெஸ்ட் டவர், எச்சலன் சதுக்கம், வேல்ட் ட்ரேட் சென்டர், கொழும்பு 1

குறுாப் மனேஜ்மென்ட் & செகரெட்டேரியல் சேர்விசஸ் (பிறைவேட்) லிமிட்டட்
கம்பனிச் செயலாளர்கள்.

இல. 141/3,
வொக்ஷோல் வீதி,
கொழும்பு 2.

3- 809

---

### கம்பனி கூட்டிணைக்கப்பட்டது பற்றிய பொது அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1) ஆம் பிரிவிற்கேற்ப அறிவித்தல் இத்தால் தரப்படுகின்றது.-

கம்பனியின் பெயர் : லங்கா சயன்டிபிக் லெபோரட்டரி சேர்விசஸ்(பிறைவேட்) லிமிட்டட்
கம்பனி பதிவு இல. : பீவீ 124858
கூட்டிணைக்கப்பட்ட திகதி : 2017, ஓகத்து 21 ஆந் திகதி
பதிவு செய்யப்பட்ட முகவரி : இல. 145, கின்சி வீதி, பொரல்ல, கொழும்பு 8

சார்ட் பிஸ்னஸ் சிஸ்ரம்ஸ் (பிறைவேட்) லிமிட்டட்
கம்பனிச் செயலாளர்கள்.

இல. 141/3,
வொக்ஷோல் வீதி, கொழும்பு 2.

3- 810

---

### கம்பனி கூட்டிணைக்கப்பட்டது பற்றிய பொது அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1) ஆம் பிரிவிற்கேற்ப அறிவித்தல் இத்தால் தரப்படுகின்றது.-

கம்பனியின் பெயர் : கார்டன் ஹொலிடேஸ் (பிறைவேட்) லிமிட்டட்
கம்பனி பதிவு இல. : பீவீ 120207
கூட்டிணைக்கப்பட்ட திகதி : 2017, பெப்புருவரி 20 ஆந் திகதி
பதிவு செய்யப்பட்ட முகவரி : இல. 9/47, 6 ஆவது ஒழுங்கை, பாகொட வீதி, நுகேகொடை

சார்ட் பிஸ்னஸ் சிஸ்ரம்ஸ் (பிறைவேட்) லிமிட்டட்
கம்பனிச் செயலாளர்கள்.

இல. 141/3, வொக்ஷோல் வீதி,
கொழும்பு 2.

3- 811

---

### கம்பனி கூட்டிணைக்கப்பட்டது பற்றிய பொது அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1) ஆம் பிரிவிற்கேற்ப அறிவித்தல் இத்தால் தரப்படுகின்றது.-

கம்பனியின் பெயர் : எம் கே ஏ இன்டர்நெஷனல் (பிறைவேட்) லிமிட்டட்
கம்பனி பதிவு இல. : பீவீ 119554
கூட்டிணைக்கப்பட்ட திகதி : 2017, சனவரி 23 ஆந் திகதி
பதிவு செய்யப்பட்ட முகவரி : இல. 65/13, ஓரிசெட் பிளேஸ், ஒப் சுவனடிசி பிளேஸ், கொஸ் வத்த, நாவல, ராஜகிரிய

சார்ட் பிஸ்னஸ் சிஸ்ரம்ஸ் (பிறைவேட்) லிமிட்டட்
கம்பனிச் செயலாளர்கள்.

இல. 141/3,
வொக்ஷோல் வீதி, கொழும்பு 2.

3- 812

---

### கம்பனி கூட்டிணைக்கப்பட்டது பற்றிய பொது அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1) ஆம் பிரிவிற்கேற்ப அறிவித்தல் இத்தால் தரப்படுகின்றது.-

கம்பனியின் பெயர் : கார்ஸ் பொடி ஷொப் கண்டி (பிறைவேட்) லிமிட்டட்
கம்பனி பதிவு இல. : பீவீ 128789
கூட்டிணைக்கப்பட்ட திகதி : 2018, சனவரி 11 ஆந் திகதி
பதிவு செய்யப்பட்ட முகவரி : இல. 04, வில்லியம் கொபல்லாவ மாவத்தை, கண்டி

சார்ட் பிஸ்னஸ் சிஸ்ரம்ஸ் (பிறைவேட்) லிமிட்டட்
கம்பனிச் செயலாளர்கள்.

இல. 141/3,
வொக்ஷோல் வீதி, கொழும்பு 2.

3- 813

---

### கம்பனி கூட்டிணைக்கப்பட்டது பற்றிய பொது அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1) ஆம் பிரிவிற்கேற்ப அறிவித்தல் இத்தால் தரப்படுகின்றது.-

கம்பனியின் பெயர் : எக்டிவ் மயின்ட் சொலூஷன்ஸ் (பிறைவேட்) லிமிட்டட்
கம்பனி பதிவு இல. : பீவீ 122951
கூட்டிணைக்கப்பட்ட திகதி : 2017, யூன் 07 ஆந் திகதி
பதிவு செய்யப்பட்ட முகவரி : இல.61/A, கண்டி வீதி, கிரிபத்கொட

சார்ட் பிஸ்னஸ் சிஸ்ரம்ஸ் (பிறைவேட்) லிமிட்டட்
கம்பனிச் செயலாளர்கள்.

இல. 141/3,
வொக்ஷோல் வீதி,
கொழும்பு 2.

3- 814

---

### கம்பனி கூட்டிணைக்கப்பட்டது பற்றிய பொது அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1) ஆம் பிரிவிற்கேற்ப அறிவித்தல் இத்தால் தரப்படுகின்றது.-

கம்பனியின் பெயர் : சுப்ரிம்செட் ஜப்பான் (பிறைவேட்) லிமிட்டட்
கம்பனி பதிவு இல. : பீவீ 125918
கூட்டிணைக்கப்பட்ட திகதி : 2017, செத்தெம்பர் 27 ஆந் திகதி
பதிவு செய்யப்பட்ட முகவரி : லெவல் 33, வெஸ்ட் டவர், எசெலோன் சதுக்கம், வேல்ட் ட்ரேட் சென்டர், கொழும்பு 1

குறுாப் மனேஜ்மென்ட் & செகரெட்டேரியல் சேர்விசஸ் (பிறைவேட்) லிமிட்டட்
கம்பனிச் செயலாளர்கள்.

இல. 141/3,
வொக்ஷோல் வீதி, கொழும்பு 2.

3- 815

---

### கம்பனி கூட்டிணைக்கப்பட்டது பற்றிய பொது அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1) ஆம் பிரிவிற்கேற்ப அறிவித்தல் இத்தால் தரப்படுகின்றது.-

கம்பனியின் பெயர் : எனர்ஜஸ் கன்சல்டன்சி ஸவுத் ஏசியா (பிறைவேட்) லிமிட்டட்
கம்பனி பதிவு இல. : பீவீ 119200
கூட்டிணைக்கப்பட்ட திகதி : 2017, சனவரி 13 ஆந் திகதி
பதிவு செய்யப்பட்ட முகவரி : இல. 141/3, வொக்ஷோல் வீதி, கொழும்பு 2

சார்ட் பிஸ்னஸ் சிஸ்ரம்ஸ் (பிறைவேட்) லிமிட்டட்
கம்பனிச் செயலாளர்கள்.

இல. 141/3,
வொக்ஷோல் வீதி, கொழும்பு 2.

3- 816

---

### பெயர் மாற்றம் பற்றிய பகிரங்க அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(2)ஆம் பிரிவின் பிரகாரம் கீழ்க்காணும் கம்பனியின் பெயர் மாற்றப்படுவதாக இத்தால் அறிவிக்கப்படுகின்றது.-

கம்பனியின் பழைய பெயர் : ஸ்பார்க்ஸ் இனோவேஷன்ஸ் (பிறைவேட்) லிமிட்டட்
கம்பனி பதிவிலக்கம் : பீவீ 9388
பதிவு செய்யப்பட்ட முகவரி : இல. 146, டோசன் வீதி, கொழும்பு2
கம்பனியின் புதிய பெயர் : ஸ்பார்க்ஸ் டிஜிடல் (பிறைவேட்) லிமிட்டட்
பெயர் மாற்றம் செய்யப்பட்ட திகதி : 2018.02.26

பணிப்பாளர்.

3- 820

---

### ரஷ் கொன்ஸ்ரக்ஷன் (பிறைவேட்) லிமிட்டட்
### பொது அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 242 ஆம் பிரிவின் (3) (b) உப பிரிவிற்கிணங்க ரஷ் கொண்ஸ்டக்ஷன் (பிறைவேட்) லிமிட்டட்டை (242(1) க்கு இணங்க கம்பனி பதிவிலக்கம் பீவீ 76077) ரஷ் புறொபர்டி டிவலப்பர்ஸ் (பிறைவேட்) லிமிட்டட் (கம்பனி பதிவிலக்கம் பீவீ 9231) உடன் 242(1) க்கு இணங்க இணைப்பது பற்றிய அறிவித்தல்

2018, பெப்புருவரி 23 ஆந் திகதியன்று கூடிய ரஷ் புறொபர்டி டிவலப்பர்ஸ் (பிறைவேட்) லிமிட்டட்டின் முற்று முழுதான துணை நிறுவனமான ரஷ் கொண்ஸ்ரக்ஷன் (பிறைவேட்) லிமிட்டட்டின் பணிப்பாளர் சபையினரும் ரஷ் கொண்ஸ்ரக்ஷன் (பிறைவேட்) லிமிட்டட்டின் பணிப்பாளர் சபையினரும் (நிறுவனம்) சந்தித்து, ரஷ் கொண்ஸ்ரக்ஷன் (பிறைவேட்) லிமிட்டட்டை, ரஷ் புறொபர்டி டிவலப்பர்ஸ் (பிறைவேட்) லிமிட்டட்டுடன் பிரிவு 242(1) இணைப்பது குறித்து முடிவெடுக்கப்பட்டது. அதன் பிரகாரம் ரஷ் புறொபர்டி டிவலப்பர்ஸ் (பிறைவேட்) லிமிட்டட் நிலைத்திருக்க ரஸ்கொண்ஸ்ரக்ஷன் (பிறைவேட்) லிமிட்டட் அதன் செயற்பாட்டை நிறுத்தும்.

இவ்வறிவித்தல் வெளிவந்த 20 தினங்களுக்குள் 244(1) ஆம் பிரிவிற்கிணங்க ரஷ் கொண்ஸ்ரக்ஷன் (பிறைவேட்) லிமிட்டட் மற்றும் ரஷ் புறொபர்டி டிவலப்பர் (பிறைவேட்) லிமிட்டட் ஆகியவற்றை ஒன்றாக இணைப்பதற்கு தேவையான, பிரிவு 243இல் குறிப்பிடப்பட்டுள்ள ஆவணங்கள், கம்பனிகள் பதிவாளர் நாயகம் அலுவலகத்தில் சமர்ப்பிக்கப்பட வேண்டும். இதன் பின்னர் இவ்விரு நிறுவனங்களின் இணைப்பானது செல்லுபடியாகும்.

சட்டத்தின் 242(4) ஆம் பிரிவிற்கிணங்க இணைப்பு தொடர்பான முன்மொழிவுகளின் பிரதிகள், இணைவு குறித்த ரஷ் புறொபர்டி டிவலப்பர்ஸ் (பிறைவேட்) லிமிட்டட் மற்றும் ரஷ் கொண்ஸ்ரக்ஷன் (பிறைவேட்) லிமிட்டட்டின் பணிப்பாளர் சபையினரின் அங்கீகாரம் என்பன இந்நிறுவனத்தின் பங்குதாரர்கள் மற்றும் இந் நிறுவனம் பொறுப்புக் கூறத்தக்கவர்கள் பார்வையிடும் வகையில், நிறுவனத்தின் காரியதரிசிகளான, எஸ்ஜே கோர்பரேட் சேர்விசஸ் (பிறைவேட்) லிமிட்டட்டின் இல. 20A, வல்பொல வீதி, அகொன, அங்கொட எனும் முகவரியில் உள்ள அலுவலகத்தில் வைக்கப்பட்டிருக்கும். சாதாரண வேலை நேரங்களில் பார்வையிட முடியும்.

இவ்விணைப்பு குறித்த ஆவணங்களின் பிரதியானது இந்நிறுவனத்தின் பங்குதாரர் அல்லது, இந்நிறுவனம் பொறுப்புக் கூறவேண்டியவர்களுக்கு, அவர்கள் கோரிக்கை விடுக்குமிடத்து இலவசமாக அனுப்பி வைக்கப்பட வேண்டும்.

ரஷ் கொண்ஸ்ரக்ஷன் (பிறைவேட்) லிமிட்டட்டின் பணிப்பாளர் சபையின் உத்தரவுக்கமைய,

எஸ். ஜே. கோர்பரேட் சேர்விசஸ் (பிறைவேட்) லிமிட்டட்
காரியதரிசிகள்.

2018, பெப்புருவரி 23.

3- 844

---

# பகுதி I : தொகுதி (IIஆ) - விளம்பரங்கள்

**குறிப்பு**.- மேற்படி தலைப்பின் கீழான மற்றைய அறிவித்தல்களை தயவுசெய்து 2018.03.23 ஆந் திகதி பிரசுரமாகும் அரசாங்க வர்த்தமானியில் பார்க்கவும்.

---

# பகுதி I : தொகுதி (I) - பொது

**குறிப்பு**.- மேற்படி தலைப்பின் கீழான சகல அறிவித்தல்களை தயவுசெய்து 2018.03.23 ஆந் திகதி பிரசுரமாகும் அரசாங்க வர்த்தமானியில் பார்க்கவும்.

---

வரையறுக்கப்பட்ட இலங்கை ஐக்கிய செய்திப் பத்திரிகை கம்பனியினால் அச்சிட்டு விநியோகிக்கப்பட்டது.
www.documents.gov.lk